

பி. ஸ்ரீ

401. நிலாப் பாட்டு


வால்மீகியின் இயற்கை வருணனை

அழகு வாய்ந்த அரக்கர் பேரூரை அனுமன் பார்ப்பதற்காகத் தானும் உதவி செய்பவன்போல் சந்திரன் நட்சத்திரக் கூட்டங்களுக்கிடையே உதயஞ்செய்தான், பல்லாயிரம் நிலாச்சுடர்களுடன். வெண்ணிலவு என்னும் விதானத்தை உலகமெல்லாம் வியாபிக்குமாறு மேலே கட்டினான். வலம்புரிச் சங்கின் காந்தியுடன், பால் தாமரைத்தண்டு ஆகியவற்றின் வண்ணம் கொண்ட சந்திரன் உயரச் சென்று கொண்டே ஒளி வீசுவதைக் கண்ணுற்ற வானர வீரன், 'நிர்மலமான தடாகத்தில் ஆனந்தமாக நீந்திக்கொண்டு வரும் ராஜஹம்ஸமோ?' என்று நினைத்தான்.

இலங்கை யழகுகளை அதிசயமாய்க் கண்ட அகமகிழ்ச்சியானது, சீதையைத் தேடிக் காணவேண்டுமே என்ற ஏக்கத்திலே மறைந்து கொண்டிருக்கும் சமயம். பளிச்சென்று சந்திரோதயம் கண்டதும் அந்த இயற்கை யழகிலே ஏக்கமும் சிறிது மறைகின்றது. நிர்மலமான வானக் குளத்திலே உல்லாஸமாக நீந்தி வரும் ராஜஹம்ஸம் போல வருகின்றானே சந்திரன் என்ற இந்த நினைப்பு அனுமனைப் பரம ரஸிகனாகக் காட்டுகிறதல்லவா? இந்தப் பகுதியிலே, வால்மீகியின் வெண்ணிலா வருணனை எவ்வளவு அழகா யிருக்கிறது, பாருங்கள்!

கம்பனின் சந்திரோதயம்

இனி நாம் கம்பனுடைய நிலாப் பாடல்களை நோக்குவோம். சூரியாஸ்தமன வேளையிலும், மாலை மயங்கி இருள் சூழ்ந்து கொண்ட வேளையிலும் அனுமன் ராட்சஸ பூமியை நோக்கினானல்லவா? 'இந்த மகாராஜ்யத்திலே ராணுவ தர்மமாகிய ஒழுங்கும் கட்டுப்பாடும் இருக்க முடியும்; ஆனால் தர்மம் இருக்க முடியுமா?' என்ற எண்ணமும் தோன்றியிருக்கக் கூடுமல்லவா? 'தர்மம் இருந்தாலும் தீந்து கரிந்து போய்த்தானே இருக்க வேண்டும்—இங்கு அப்படிச் சுடுகின்றதே தீவினைத் தீயின் வெப்பம்!' என்ற நினைப்பும் தோன்றக் கூடியதே.



இந்த நிலையில், சந்திரோதயத்தோடு கொஞ்சம் நம்பிக்கையும் உதயமாகிறது நமக்கு :

தீண்டருந் தீவினை
   தீக்கத் தீந்து போய்
மாண்டற உலர்ந்தது,
   மாரு திப்பெயர் –
ஆண்தகை மாரிவந்(து)
   அளிக்க ஆயிடை
ஈண்டறம் முளைத்தென
   முளைத்த(து) இந்துவே.

[தீண்டரு – தீண்டத் தகாத. தீக்க – எரித்தலால். அற – மிகவும். மாருதி – அனுமன். ஆண்தகை மாரி – வீரனாகிய மழை. அளிக்க – உதவிக் காப்பாற்ற. ஆயிடை – அப்பொழுது, ஈண்டு – இவ்விடத்தில். முளைத்தென – முளைத்தாற் போல. இந்து – சந்திரன்.]

உண்மையை அடிநிலமாகவும் அருளை வேராகவும் கொண்டு வளரும் மூலிகைப் பூண்டு அறம் என்பது கம்பன் கொள்கை. தீவினையென்ற கோடை வெயிலில் இம்மூலிகை தீந்து மாண்டு அறவே உலர்ந்து போய்விட்டதாம். ஆனால் ஆணிவேர் மறைந்து கிடக்கிறது. ஆம், விபீஷணன் ஒருவன் இருப்பதால் என்பது குறிப்பு.

ஒரு மழை விழுந்தால் மூலிகை மறுபடியும் முளைக்கும், தளிர்க்கும், தழைக்கும், பிழைத்துக் கொள்ளும். அந்த மழைதான் அனுமன் என்ற பெயருடன் வந்து இறங்கியிருக்கிறதாம் அரக்கர் பூமியில். இந்நிலையில் அறம் முளைத்தாற் போல வெண்ணிலா முளைக்கிறதாம்.

தீண்டத் தகாதது தீச்செயல்தான் என்பது 'தீண்டருந் தீவினை' என்ற சொற்றொடரின் புதை பொருள். வேறு தீண்டாமை இல்லையென்பதும், கூடுமானால் தீவினையாளரையும் தீண்டித் திருத்த முயல்வதே நல்லறிவாளர் கடன் என்பதும் கவியுள்ளம். ஆனால் இந்த நிலாப் பாட்டில் வால்மீகியில் கண்டது போன்ற இயற்கை வருணனை யில்லையே என்று குறை கூறுவோர் உண்டு.

இனி அடுத்த நிலாப் பாட்டைப் பார்ப்போம் :

'வந்தனன் இராகவன்
   தூதன் ; வாழ்ந்தனன்
எந்தையே இந்திர –
   னமென்' றேமுறு,
அந்தமில் கீட்டிசை
   அளக வாணுதற்
சுந்தரி முகமெனப்
   பொலிந்து தோன்றிற்றே.

[இராகவன் தூதன் – ராமதூதனாகிய அனுமன். வாழ்ந்தனன் எந்தையே இந்திரனும் என்று – இனி எம் தலைவனாகிய இந்திரனே வாழ்ந்தவனாவன் என்று எண்ணி. ஏமுறு – மகிழ்ச்சி அடைந்து. அந்தமில் – அந்தமில்லாத; எல்லையற்ற. கீட்டிசை – கீழ்த்திசை. கீட்டிசை அளக வாள் நுதல் சுந்தரி – இருட்டாகிய கூந்தலையும் ஒளி மயமான நெற்றியையுமுடைய கிழக்குத் திசை என்ற சுந்தரி.]

கிழக்குத் திசையில் இருளைத் தள்ளிக் கொண்டு வருகின்ற சந்திர பிம்பத்திற்கு இசைந்த உபமானம்தான். இந்திரனுக்கு உரியது கிழக்குத் திசை என்பர். எனவே இந்திரனைக் கிழக்குத் திசையென்ற சுந்தரியின் தலைவனாகக் கற்பனை. ராகவ தூதனின் வருகையால் இனி வாழ்வு இந்திரனுக்குத்தான், ராவணனுக்கல்ல என்ற அகமகிழ்ச்சியே முக மலர்ச்சியாகி விட்டதாம் கிழக்குத் திசையிலே! இதுவும் இயற்கை வருணனைப் பாட்டாகாதே எனக் குறை கூறுவோர் கூறத்தான் செய்வர்.

இவர்கள், அதோ நிலவில் வெண் சாமரை வீசுவது போலச் சுழன்று வீசும் கடலலைகளின் நுரைத்த வெண்ணிற அழகைக் கண்டு மகிழலாம்:

கற்றைவெண் கவரிபோல்
  கடலின் வெண்டிரை
சுற்றும்நின்(று) அலமரப்
  பொலிந்து தோன்றிற்
    றால்,
'இற்றதெம் பகை'யென
  எழுந்த இந்திரன்
கொற்றவெண் குடை
    யெனக்
  குளிர்வெண் டிங்களே.

[கற்றைவெண் கவரிபோல்—தொகுதியாகச் சுழன்று வீசி விளங்கும் வெண் சாமரைகள் போல. வெண்டிரை—வெண்ணிற அலைகள். சுற்றும் நின்று—சுற்றிலும் நின்று. அலமர—சுழன்று விழ. இற்றது எம் பகை என—இனி எமது பகையாகிய அரக்க வர்க்கம் ஒழிந்தது என்று. வெண்டிங்கள்—வெண்ணிறமான சந்திரன்.]

ஆனால் இயற்கை வருணனை போலத் தொடங்கும் இப்பாட்டும் எப்படி முடிகிறது பாருங்கள்? இதுவரை அடங்கி ஒடுங்கிக் கிடந்த தேவராஜா இப்போது உல்லாஸமாகப் புறப்பட, அவனது கொற்றவெண் குடை விளங்குவது போலப் பொலிகின்றதாம் சந்திர மண்டலம்.

பால்நிலவும் நட்சத்திரங்களும்

இயற்கை வருணனைப் பிரியர்கள், சந்திரிகை மேலும் கீழும் பொங்கிப் பரவும் அழகைப் பார்த்து ஆனந்திக்கலாம். சந்திரனாகிய வெள்ளிக் குடங் கொண்டு வான மோகினி பாற்கடலின் பாலை மேலேயிருந்து மொண்டெடுத்துக் குடங் குடமாகச் சொரிவது போலிருக்கிறதாம் பால் நிலவு. இப்படிச் சொரியும்போது கடல் மீன்களும் பாலோடு வந்து தள்ளுவது போல் மிளிர்கின்றன, விண்மீன்களாகிய நட்சத்திரங்கள்.

இந்தப் பால் நிலா வருணனை எப்படியிருக்கிறது?



தெரிந்தொளிர் திங்கள்வெண்
குடந்தி றல்,திரை
முரிந்துயர் பாற்கடல்
முகந்து, மூரிவான்
சொரிந்ததே யாம்எனத்
துள்ளி மீனெடும்
விரிந்தது வெண்ணிலா
மேலும் கீழுமே.

[தெரிந்து ஒளிர் — தோன்றி விளங்குகிற. திங்கள் வெண்குடம் — சந்திரன் என்ற வெள்ளிக்குடம். திரை — அலைகள். முரிந்து உயர் — மடிந்து உயரும். முகர்ந்து — மொண்டு. மூரிவான் — பெரிய வானம்.]

இனி, நட்சத்திர வருணனையும் பாருங்கள்—பொருத்தமாக அமைந்து விடுகிறது :

என்னுடை அனுமன்மேல்
இழிந்த பூமழை
மண்ணிடை வீழ்கில,
மறித்தும் போகில,
அண்ணல்வா ளரக்கனை
அஞ்சி, ஆய்கதிர்
விண்ணிடைத் தங்கின
போன்ற மீனெலாம்.

[என்னுடை — சிந்தனையில் மூழ்கியிருக்கும். இழிந்த—(தேவர்கள் சொரிய) இறங்கி வந்த. மண்ணிடை வீழ்கில — கீழே பூமியில் விழாதனவாயும். மறித்தும் போகில — மீண்டும் மேலே போகமாட்டாதனவாயும். அண்ணல் வாள் அரக்கனை — பெருமையுள்ள வாளாயுதம் ஏந்திய ராவணனை. ஆய்கதிர் விண்ணிடை — தெளிவாய் விளங்குகின்ற (சூரியன் முதலிய) சுடர்கள் சஞ்சரிப்பதற்கு இடமாகிய வானத்தில். மீனெலாம் — நட்சத்திரங்களெல்லாம்.]

அனுமனை இலங்கையில் கண்டுவிட்ட குதூகலத்திலே தேவர்கள் தம்மை மறந்து, ராவண பயத்தையும் மறந்து, மலர்மாரி பொழிந்து விட்டது போல ஒரு கற்பனை. அசட்டுத்தனமாய் அவர்கள் அப்படிச் செய்து விட்டாலும் அந்த மலர்கள் ராவண பயத்தால் தரையில் விழமாட்டோம் என்கின்றனவாம். திரும்பி மேலே போகவும் இல்லையாம் —அவ்வளவு பெரும் பயம் !

ஒரு பெரிய ஆபத்தை எதிரே பார்த்து விட்டவன் முன்னும் போகாமல் பின்னும் போகாமல் திக்பிரமை கொண்டு அப்படியே நின்று விடுவதுபோல அந்தரத்திலே தங்கி விடுகின்றனவாம் மலர்கள். அவைதானும் வானவீதியெங்கும் வாரி இறைத்துக் கிடக்கும் நட்சத்திர மலர்கள். இயற்கைப் பிரியர்கள் ஒப்புக் கொண்டாலும், ஒப்புக் கொள்ளாவிட்டாலும் எவ்வளவு பொருத்தமான, வசீகரமான வருணனை !

வெண்ணிற உறை செய்து இலங்கா நகரம் முழுவதும் மூடி விட்டார்களா, என்ன ?— அப்படி விழுகிறதாம் சந்திரிகை இலங்கை யெங்கும். ராமபிரானது மாசிலா வெண்புகழ், அனுமன் மூலமாக இலங்கை முழுவதும் பரவி விளங்குவது போலவும் தோன்றுகிறதாம்.

அகழியிலும் மதில்மீதும் மற்ற இடங்களிலும் நிலாக்கதிர்கள் புகுந்து உலாவும் அழகைப் பாருங்கள் :

அகழ்புகுந்(து), அரண்புகுந்(து)
இலங்கை, அன்னவன்
புகழ்புகுந்(து) உலாயதோர்
பொலிவும் போன்றதே.

[அரண்—மதில். இலங்கை—இலங்கையில். அன்னவன் புகழ்—அந்த ராமனது புகழ். உலாயது ஓர் பொலிவும்—உலாவியதான ஓர் அழகும்.]

இந்த நிலாப்பாடல்கள் மீண்டும் மீண்டும் பாடி யனுபவிக்கத் தக்கன, இதிகாசப் போக்குடன் இரண்டறக் கலந்து, இயற்கை வருணனைக்கும் இசைந்து பொலிகின்றன இவை என்பது என் கருத்து.

இந்தச் சந்திரிகையிலே அனுமன், 'இலங்கைக் குள்ளே நாம் எந்த வழியாகப் போகலாம் ?' என்று ஆலோசிக்கிறான், உடனே புறப்படுகிறான்.



402. தீப்பூத்த கல்யாண முருங்கை

நிமிர்ந்த வீரம்

இலங்கையின் வட்டமதிலை நெருங்கி விடுகிறான் தன்னந்தனியாக வருகின்ற அனுமன். அத் தோற்றத்திலே தான் எத்தகைய மாட்சி! அந்த நடையிலே தான் என்ன மிடுக்கு, என்ன அபார மான தன்னம்பிக்கை!

மடங்கல்அரி ஏறு,மத
  மால்களிறு நாண
நடந்து தனி யேபுகுதும்
  நம்பி,நனி மூதூர்
அடங்கரிய தானை-அயில்
  அந்தகன தானைக்
கடுந்திறலின் வாயனைய
  வாயில்,எதிர் கண்டான்.

[மடங்கல் அரி ஏறு - மடங்கும் பிடரி ரோமத்தோடு கூடிய ஆண் சிங்கம். மத மால்களிறு - பெரிய மதயானை. புகுதும் - செல்கிற. நம்பி - ஆடவரில் சிறந்தவன்; (இங்கே) அனுமன். நனி மூதூர் - பழமையான பெரிய அவ்வூரில். அடங் கரிய தானை-அடங்காத ராட்சஸ சேனை. அயில் அந்தகன் - சூலாயுதம் ஏந்திய யமன். கடுந்திறல் - கொடிய வலிமை. வாய் அனைய - வாய் போன்ற. வாயில் - வாசல்.]

அனுமன் அடியிட்டு வரும் தோரணையே, 'ஜயமுண்டு பயமில்லை' என்றெல்லாம் ஜயபேரிகை கொட்டி வருவது போலக் காண்கிறது இந்தச் செய்யுளின் வாயிலாக.

சித்தத்திலே சிவம்
  நாடுவார் - இங்கு
சேர்ந்து களித்துல-
  காளுவார் - நல்ல
மத்த மதவெங்
  களிறுபோல் - நடை
வாய்ந்(து) இறு மாந்து
  திரிகுவார்

என்று பாரதி கூறும் நடை யிலக்கணத்திற்கு முன்னமே தோன்றியுள்ள ஓர் இலக்கியம் போல, 'நடந்து தனியே' வருகின்றான் அனுமன், சித்தத்திலே ராம காரியத்தை நாடிய வண்ணம்.

ராட்சஸ சேனையால் காவல் செய்யப் படுவதும், யமனது ஆணைக்கு இணங்கக் கொன்று தின்னத் திறந்த வாய் போல் இருப்பதுமான கோட்டை வாசலை எதிரே காண்கிறான்.

தீப்பூத்த கோரம்

‘மலையை நிறத்திக் குடைந்திருக்கிறதோ?’ எனத் தோன்றிய கோட்டை வாசலின் இருபுறமும் ஆயுதபாணிகளான காவலாளிகள் :

வெள்ளமொரு நூறொடொரு
  நூறும்உடை வீரக்
கள்ளவினை வெவ்வலி
  அரக்கர்,இரு கையும்
முள்ளெயிறும் வாளும்உற
  முன்னம்முறை நின்றார்,
எள்ளரிய காவலினை
  அண்ணலும் எதிர்ந்தான்.

[வெள்ளம் ஒரு நூறொடு ஒரு நூறும் உடை - இருநூறு வெள்ளம் என்னும் தொகையுடைய. வீரக் கள்ளவினை வெவ்வலி அரக்கர் - வீரமும் வஞ்சனையும் கொடுமையும் உடைய அரக்கர்கள். இரு கையும் - (கோட்டை வாசலின்) இரண்டு பக்கங்களிலும். முள் எயிறு - முள்ளுப்போல் கூரிய பற்கள். உற - பொருந்த. முன்னம் முறை - முன்னிடத்திலே முறைப்படி. எள் அரிய - சிறிதும் அசட்டையில்லாத. அண்ணல் - பெருமையில் சிறந்த அனுமன். எதிர்ந்தான் - எதிரே கண்டான்.]

வாள் சூலம் வில் வேல் மழு ஈட்டி தடி வளைதடி திருகுதடி இருப்புலக்கை கவண் பாசக் கயிறு முதலான பழைய காலப் போர்க் கருவிகளே அவர்கள் கையில் காணப்படுகின்றன. துப்பாக்கி பீரங்கி வெடிக்குண்டு அணுகுண்டு முதலான நாகரிக நவ நாசக் கருவிகளில் ஒன்றுமே இல்லை! எனினும் இரண்டு பாடல்களில் இந்த ஆயுத ஜாலங்கள் இரத்த தாகத்துடன் செய்யும் ஜண ஜண சப்த ஜாலங்களைக் கேட்பது போலத் தோன்றுகிறது.

கொலைக் கருவிகளின் பசி தாக வெறியுடன், இரத்தம் போல் அடர்ந்த செம்பட்ட ரோமமும், இரத்தச் சிவப்புக் கண்களும் முகங்களும் — ஆஹா, என்ன கோரம், கொடுங்கோரம்! நீங்களே பார்த்துக் கொள்ளுங்கள் :

சூலம்மழு வாளொடயில்
  தோமரம் உலக்கை
காலவரி விற்பகழி
  கற்பணம் முசுண்டி
கோல்கணைய நேமிகுலி—
  சம்சுரிகை குந்தம்
வாலம்முதல் ஆயுதம்
  வலித்தனர் வலத்தார்.

அங்குசம் நெடுங்கவண்
  அயிற்சிலை வழங்கும்
வெங்குசைய பாசமுதல்
  வெய்யபயில் கையார்,
செங்குருதி யன்னசெறி
  குஞ்சியர், சினத்தோர்,
பங்குனி மலர்ந்தொளிர்
  பலாசவனம் ஒப்பார்.

[மழு — (இங்கே) கோடாலி அல்லது எறிகின்ற ஓர் இரும்புக் கருவி. வாளொடு அயில் — வாளோடு வேலும். தோமரம் — ஒருவகைப் பெரிய ஈட்டி. கால வரி வில் பகழி — காலன் போன்ற (கட்டமைந்த) வில்லும் அம்பும். கற்பணம் — நெரிஞ்சில் முள்ளைப் போல் இரும்பால் செய்த ஆயுதம். முசுண்டி — ஒரு பயங்கர ஆயுதம். கோல் — தடி. கணையம் — வளைதடி. நேமி — சக்கரம். குலிசம்—வச்சிராயுதம். சுரிகை—உடைவாள். குந்தம் — கைவேல். வாலம் — பிண்டிபாலம் என்ற திருகு தடி. முதல் ஆயுதம் — முதலான ஆயுதங்கள். வலித்தனர் — உறுதியாகப் பிடித்துள்ளார். வலத்தார் — பலசாலிகளான அரக்கர்கள். அங்குசம் — யானையின் காதில் மாட்டி இழுத்து அதை அடக்கும் கருவி. நெடுங்கவண் — நீண்ட கவண் கயிறு. அயில் சிலை வழங்கும் வெங்குசைய பாசம் — நுனியில் கூர்மையானதும், வீசும்போதும் விஸ்ஸென்று ஒலி செய்வதும், கொடியதும், தர்ப்பைப் புல்லைப் போல் அறுக்க வல்லதுமான பாசக் கயிறு. முதல் வெய்ய - முதலான கொடிய ஆயுதங்கள். பயில் - பொருந்திய. செங்குருதியன்ன செறி குஞ்சியர் - இரத்தம் போன்ற அடர்ந்த செம்பட்ட மயிருள்ளவர்கள். சினத்தோர் - கோபக்காரர்கள். பங்குனி மலர்ந்து ஒளிர் பலாச வனம் - பங்குனி மாசத்தில் ஒரே

சிவப்பாய்ப் பூத்து விளங்குகிற கல்யாண முருக்கை மரங்களின் காடு.]

கல்யாண முருக்கைகள் ஒரே காடாகிச் செக்கச் சிவந்து பூப்பூத்திருப்பது போல் தீப்பூத்த கண்ணும் முகமும் செம்பட்ட மயிருமாய், ஒரே ஆயுதக் காடாகி நிற்கும் கோரத்தை அந்த இரவிலே காண்கின்றான் அனுமன்.

அந்தப் பெரிய கோட்டை வாசல் வெண்ணிலவை மறைத்துக் கொண்டு நிற்பதால், காவலாளர்கள் நின்றுகொண்டிருக்கும் அந்த வாசல் இருட்டாகத் தானிருக்கிறது. ஆனால் இருபுறமும் ராட்சஸ விளக்குகள் இருட்டை விழுங்கி வெளிச்சத்தை வீசுகின்றன:

அளக்கஅரி தாகிய
கணக்கொடயல் நிற்கும்
விளக்கினம் இருட்டினை
விழுங்கிவெளி கால,


உளக்கடிய காலன்மனம்
உட்கும்மணி வாயில்
இளக்கமில் கடற்படை
இருக்கையை எதிர்ந்தான்.

[கணக்கொடு — தொகையுடன். விளக்கினம் — விளக்குகளின் கூட்டம். வெளி கால — வெளிச்சத்தைக் கக்க. உளக்கடிய காலன் — உள்ளத்தில் கடுமையுடைய யமனும். உட்கும் — அஞ்சும்படியான. மணி வாயில் — அழகிய கோபுர வாசலில். இளக்கமில் — சோர்வில்லாத. கடற்படை — கடல்போல் பரந்த காவற் சேனை.]

இந்தக் கடுமையான காவலைக் கண்ட அனுமன்,

'தெவ்வர் இவர்!
சேமம் இது!
சேவகனும் நாமும்
வெவ்வமர்தொ
டங்கிடின், எ-
ன்னய்விளையும்?'
என்றான்.

[தெவ்வர் — பகைவர். சேமம் — பாதுகாவல். சேவகன் — வீரனாகிய ராமன். வெவ்வமர்—கொடிய போர். என் ஆய் — என்ன ஆகி.]



ஒதுங்கிப் போகும் வீரம்

'இத்தகைய காவலைக் கடந்து செல்வது எப்படி?' என்ற கவலை இப்போதுதான் ஏற்படுகிறது. தென் கடலைத் தாண்டி வந்தது பெரிதாகத் தோன்றவில்லை:

'கருங்கடல் கடத்தல் அரி—
 தன்று ; நகர்காவற்
பெருங்கடல் கடப்பதரி(து),
 என்னம்இறை பேரின்,
அருங்கடன் முடிப்பதரி—
 தாம்:அமர் கிடைக்கின்
நெருங்கமர் நிடக்கும்நெடு
 நாள் !'என நினைந்தான்.

[காவற் பெருங்கடல் - காவலாகிய பெருங்கடல். இறை பேரின் - சிறிது பிறழ்ந்தால். அருங்கடன் - அருமையாகிய கடமை. அமர் - போர். கிடைக்கின் - கிடைத்தால். நெருங்கு அமர் - நெருங்கிய அப்போர். நிடக்தும் - நீடிக்கும்.]

ஆகையால் கோட்டைவாசல் வழியே போகவேண்டாம். மேலும் அவர்கள் வைத்த வழியே ஏன் போகவேண்டும்? வல்லமைக்கு அழகன்று. வல்லான் வகுத்ததே வழி !-இப்படியெல்லாம் உள்ளத்தைச் சமாதானப் படுத்திக் கொண்டு—அனுமன் என்ன செய்யப் போகிறான் பாருங்கள் :

ஆயில்,அவர் வைத்தவழி
 ஏகல்அழ கன்று,
காய்கதிர் இயக்கில்மதி—
 லைக்கடிது தாவிப்
போயிநகர் புக்கிடுவென்'
 என்றோரயல் போனான்.

[வாயில் – வாசல். சேறல் – செல்லுதல். ஏகல் – போவது. காய்கதிர் இயக்கில் – எரிக்கின்ற சூரிய கிரணங்களும் கடந்து செல்ல மாட்டாத. புக்கிடுவென்--புகுந்திடுவேன். ஓர்அயல்—ஒரு புறமாக.]

கடலைத் தாண்டி வந்தவன், வாசல் வழியே போகாமல் மதிலைத் தாண்டிப் போகலாம் என்று ஒரு பக்கமாய் ஒதுங்கிப் போகிறான். ஆனால் அங்கே என்ன? — கோரங்களுக்கும் மேல், பயங்கரங்களுக்கும் மேல் ஒரு கோர பயங்கரம் வழி மறிக்கின்றதே, தீப்பூத்த கல்யாண முருங்கைகளுக்கும் மேலாக !

* * *

'கம்பன் தமிழ்' என்ற ஒரு தனிப் பெருஞ் சிறப்புடன் குறிப்பிடத் தக்க பாஷை நடைக்கு, மேலே காட்டிய பாடல்களை உதாரணமாகக் காட்டலாம். கம்பன் வாழ்க்கையை எப்படிக் கண்டிருக்கிறான், அனுபவித்திருக்கிறான், எத்தகைய விசால மனப்பான்மையுடன் இயற்கையையும் மனித இருதயத்தையும் உற்று நோக்கி அறிந்து கொண்டிருக்கிறான் ! தான் கண்டறிந்ததை எப்படிக் காட்டிவிடுகிறான் பாஷை வாயிலாக.

அபூர்வ எளிமை வாய்ந்த தமிழும் உவமைத் திறனும் கலந்து ஏதோ ஒரு மந்திர வித்தை செய்து, நம்மை அனுமனும் அந்தக் காவற்படையும் இருக்கும் இடத்திற்கருகே கொண்டு நிறுத்தி விடுகின்றன ! 'இயற்கை வருணனை'ப் புலவர்கள் ஏங்கிப் பெருமூச்சு விட்டுத் தூரத்திலே நிற்க வேண்டியது தான். கம்பனுடைய மனோபாவம் அவ்வளவு இயற்கையாக அனுமனுடைய நடையையும் மிடுக்கையும், காவற் படையைக் கண்டதும் உள்ளத்திலே ஏற்படுகின்ற சந்தேக சஞ்சலங்களையும் அப்படியே படம் பிடித்துக்காட்டி விடுகிறது.



பி. ஸ்ரீ

403. லங்காதேவி

இலங்கையின் காவல் — தெய்வமாகிய இலங்காதேவியை அனுமன் வென்று வலியழித்த வரலாறு வால்மீகி முனிவரின் சுந்தர காண்டத்திலே மூன்றாவது ஸர்க்கத்தில் கூறப் படுகிறது:

'வானக்குளத்திலே நீந்தி வரும் ராஜஹம்ஸமோ?' என்று உதய சந்திரனைக் கண்ணுற்றுக் களித்தபின் அனுமன் இலங்கையில் பிரவேசித்தான், தான் தங்கியிருந்த சிகரத்திலிருந்து. கால் இறங்கின மேகம் வானத்திலே தொங்குவது போலத் தோன்றியதாம் லம்ப மலையின் அந்தச் சிகரம். பொருத்தமான இயற்கை வருணனை — இல்லையா?

அழகிய பூஞ்சோலைகள் சூழ்ந்து, நீர் வளம் மிகுந்து மாளிகைகள் நிறைந்து விளங்கிய நகரத்திலே கடற்காற்று சுகமாய் வீசிக்கொண்டிருந்தது. மக்களின் கோஷமும் கடல் முழக்கம் போலிருந்தது. தங்க மயமான கதவுகள், வைடூர்யங்கள் இழைத்த மேடைகள், ஸ்படிகத்தாலும் முத்துக்களாலும் இரத்தினங்களாலும் விசித்திர வேலைப்பாடுகளுடன் அமைக்கப் பெற்ற தரைகள் முதலான காட்சிகளைக் கண்டு கொண்டும், வாத்திய முழக்கங்கள் முதலியவற்றைக் கேட்டுக்கொண்டும், அனுமன் அதிசயமாக நோக்கினான் அந்த நகரத்தை.

கண்முட்ட வளம்படைத்து விண் முட்டிக் கிளம்புவது போலத் தோன்றிய ராட்சஸ ராஜதானியைக் கண்ணுற்று, 'எந்தச் சத்துருவும் கண்ணெடுத்துப் பார்க்கக் கூடுமோ, எப்போதும் ஆயுதபாணிகளாய் ராவண சேனைகள் காவல் செய்து கொண்டிருக்கும் இப்பட்டணத்தை?' என்றெல்லாம் கவலை கொண்டான் அனுமன். எனினும் ஸ்ரீராம பராக்கிரமத்தையும் லட்சுமண வீரியத்தையும் நினைத்து மகிழ்வுற்றான்.

வால்மீகியின் லங்கிணி

இப்படிப் பார்த்துக் கொண்டே அந்தப் பட்டணத்திற்குள் பிரவேசிக்க முயலும் போது அனுமனை அந்த நகரம் காக்கும் தேவதை பார்த்து விட்டாள். விகார முள்ள ஒரு பெண்ணின் தோற்றம் கொண்டு எதிரே தோன்றிக் கோரமான சத்தத்துடன் அதட்டினாள்.

(அரக்கர் ஊரின் அதிதேவதை யல்லவா?)

'நீ யார் குரங்கே, இங்கே வந்த காரியமென்ன? உயிர் போவதற்கு முன் உண்மை சொல்லு, மூடா! உன்னால் பிரவேசிக்க முடியுமா என்ன?' என்று அவள் அதட்டவே, அனுமனும், 'பெண்ணே, உன் கேள்விக்கு உண்மையான விடை தருகிறேன். ஆனால் நீ யார்? என் இப்படி விகாரமான தோற்றத்துடன் இந்தக் கோட்டை வாசலில் நின்று கொண்டு என்னைத் தடுத்து வெருட்டுகிறாய்?' என்று ஓர் எதிர்க் கேள்வி போட்டான்.

தான் கேட்ட கேள்விக்குப் பதில் சொல்லாமல் தன்னையே எதிர்த்துக் கேள்விபோடத் துணிந்த அனுமனிடம் கோபங்கொண்டாள் இலங்காதேவி. 'கேளடா குரங்கே! நான் ராவணேச்வரனுடைய ஆணை தாங்கி இந்நகரத்தைக் காத்து வருகிறேன். என்னை அலட்சியம் செய்து நீ உள்ளே செல்ல முடியுமோ? நானே லங்காபுரி. இதோ உன் உயிரை வாங்குகிறேன், பார்!' என்று கடுமையாகப் பேசினாள்.

அது கேட்ட அனுமன் அவளை வெல்வதற்கு வேண்டிய சக்தியை மேற்கொண்டு மகாபர்வதம் போல் அசையாது நின்றான். பிறகு ஸாத்விக சுபாவத்துடன் சொன்னான்: 'கோபுரவாசல்களுடன் கூடிய இந் நகரத்தைப் பார்க்கத்தான் வந்திருக்கிறேன். இங்குள்ள இல்லங்களையும் அரண்மனைகளையும் தோட்டங்களையும் காடுகளையும் சோலைகளையும் எல்லாவற்றையும் நன்றாய்ப் பார்க்க வேண்டுமென்று எனக்கு ஆசை அதிகமா யிருக்கிறது!'

'துஷ்ட புத்தியுள்ள அற்பக் குரங்கே, என்னை ஜயித்தால் அல்லவா நீ இந்தப் பட்டணத்தில் அடி வைக்கப் போகிறாய்?'

'பெண்ணே, இந்த நகரத்தைச் சுற்றிப் பார்த்துவிட்டு வந்ததுபோலத் திரும்பிப் போய் விடுகிறேன்.'

அனுமனுடைய இந்தச் சாந்தமான பேச்சைக் கேட்டதும் நகர தேவதை பயங்கரமாய்க் கர்ஜித்துக்கொண்டே வேகமாய்க் கையை ஓங்கி ஓர் அறை கொடுத்தாள். அனுமனும் கோபங் கொண்டு இடிச் சிரிப்புச் சிரித்து இடது கைவிரல்களை மடக்கிக் கொண்டு அந்த முஷ்டியால் குத்தினான். பெண்ணென்று நினைத்துக் கோபத்தை அதிகமாய்க் காட்டிவிட வில்லை.

எனினும், அந்த அரக்கி அந்தக் குத்தைத் தாங்க முடியாமல் நிலத்தில் விழுந்து விட்டாள். அது கண்ட அனுமன் இரக்கங் கொண்டான். லங்கா தேவியோ அஞ்சி நடுங்கிச் செருக்கழிந்து வார்த்தைகள் குளறப் பேசினாள். 'வானர சிரேஷ்டரே, என் மீது அருள் புரிவீர். மஹானுபாவரே, என்னைக் காத்தருள்வீர். இலங்காபுரியாகிய நான் இன்று உமது பராக்கிரமத்தால் ஜயிக்கப்பட்டேன்' என்று சொல்லித் தேவ ரகசியமான வேறொரு விஷயத்தையும் வெளியிடலானாள்.

'பூர்வகாலத்தில் பிரம்மதேவன் என்னை நோக்கி, "எப்போது ஒரு வானரன் உன்னைப் பராக்கிரமத்தால் ஜயிப்பானோ, அப்போது அரக்கர் குலத்திற்குக் கேடு வந்தது என்று அறிந்து கொள்வாய்" என்று வரங் கொடுத்திருக்கிறார். அந்தத் தருணம் இப்போது நேர்ந்து விட்டதென்று தெரிகிறது. துராத்மாவான ராவணனுக்கும் அரக்கர்களுக்கும் விநாசகாலம் வந்துவிட்டது. இனி இந்த இலங்கையில் உமது இஷ்டப்படியே தாராளமாய்ப் புகுந்து எந்த எந்தக் காரியங்களைச் செய்ய விரும்புகிறீரோ அவற்றையெல்லாம் செய்து கொள்வீர். பல சாபங்களால் கேடுற்றிருக்கும் இந்த நகரத்தில் பிரவேசித்துச் சகல இடங்களிலும் உமது இஷ்டப்படியே சீதையைத் தேடுவீர்' என்று கூறி முடித்தாள் லங்காதேவி.

இலங்கா தேவதையை வென்ற பின் வானரவீரன், கோபுரவாசல் வழியாக இலங்கைக்குள் செல்லாமலே மதிலைத்

தாண்டிப் போனுன் என்கிறது வால்மீகம்.

இந்தக் கதையை ஆதிகவி நன்ருகவும் ரஸமாகவும் அமைத்திருக்கிருர், இயற்கையை ஒட்டிச் செல்லும் மனேபாவத்துடன். சம்பாஷணையும் இலங்கா தேவியின் தோல்வியும் கண்முன் நடப்பது போல் நடை பெறுகின்றன.

சம்புராமாயணத்தில் லங்கினி

சம்பு ராமாயண கவி தமது ராமாயணச் சுருக்கத்திலே வால்மீகியின் கதை யழகு குன்ருது சுருக்கிக் காட்டவுமில்லை; சொந்தக் கற்பனை செய்து காட்டவுமில்லை. ஆதி காவியத்தின் இக் கதை யழகை அனுபவித்து அறிந்து கொண்டதாகவே தோன்றவில்லை.

சீதையைத் தேட இலங்கை நகருக்குள் அனுமன் பிரவேசிக்கத் தொடங்கியதும் லங்கா என்னும் பெயருள்ள காவல் தேவதை பெண்ணுருவம் கொண்டு அனுமனைத் தடுத்துப் பயமுறுத்தித் தாக்குவதற்கு முடுகி வந்தது. அனுமன் கையால் குத்திக் கடிதினில் வெல்ல, அவள் பிரமனுணையைத் தெரிவித்தாளாம். அதாவது, வானரம் ஒன்றின் வலிமையால் நகரத்திற்கு ஏற்படப் போகும் கேட்டினைப் பிரமன் உணர்த்தத் தான் உணர்ந்திருந்தாளே, அந்த விஷயத்தை லங்காதேவி அனுமனுக்கு உணர்த்தினுள். உணர்த்தியதும், அனுமன் அவள் கருத்தின் வழியே நகர முழுதும் சீதையைத் தேட விரைந்து புறப்பட்டான்.



வால்மீகத்திலே ஸாரத்தைப் பிழிந்து தள்ளி விட்டுச் சக்கையைத் தந்து விட்டாரோ என்று தான் தோன்றுகிறது.

அப்பால் தன்னிடத்திற்கு வந்த அதிதிக்குத் தன் வீட்டிலுள்ள பொருள்களை ஒரு பெண் விளக்கேற்றிக் காட்டுவது போல, இரவு என்னும் பெண் அனுமனுக்கு இலங்கை நகரத்துப் பொருள்களையெல்லாம் நில வொளியில் காட்டுகிருளென்று சம்பு ராமாயணம் வருணிப்பது, அழகாய் அமைந்து விடுகிறது.

இனி நாம் கம்பனுடைய 'இலங்கைமாதேவி' யை நோக்குவோம். ராட்சஸக் காவற் பெருங்கடலின் கோரக் காட்சியைக் கண்டபின் அக்

தக் கோட்டை வாசல் வழியே போகாமல் மதிலைத் தாண்டித்தான் போவோமா என்று ஒரு புறமாய் ஒதுங்கிப் போன அனுமன், கோரத்திற்குமேல் ஒரு கோரமாகச் சந்திக்கிறான் இலங்காதேவியை.

பாம்பு போலச் சீறிக் கோபாக்கினி கக்கும் கண்கள் மதிற்புறத்திலிருந்து தன்னை நோக்கின என்பதை அனுமன் எப்படி யறிவான்? சிந்தனைகளில் மூழ்கியவனாய், அந்தக் கோர ரூபம் வழி மறித்து நிற்பதையும் கவனிக்காமலே போகிறான். அவளோ கனலும் கண்களால் பார்த்துக் கொண்டிருக்கிறாள், 'ஐயோ லங்கிணி!' என்று பார்த்தவர்கள் அலறவேண்டிய நிலையில்.

இந்த லங்கிணியைக் கம்பன் அறிமுகப்படுத்தும் தோரணையைத் தான் பாருங்கள். முதன் முதல் காவல் செய்யும் அந்தக் கண்களைக் கண்டு, பிறகு ஆளையே பார்த்து விடுவோம்.

இலங்கையின் வீணாளாகிய வாணாளே விஷாக்கினி கக்கும் பாம்புக் கண்களுடன் ஒரு கோரப் பார்வை பார்க்கிறது பாருங்கள்:

நாளு ளும்தான்
நல்கிய காவல்
நனிமூதூர்
வாளு ளன்னாள்,
போவதின் மேலே
வழிநின்றாள்,
தூளு மென்னும்
தோளுடை யானைச்,
சுடரோனைக்
காணு வந்த
கட்செவி யென்னக்
கனல்கண்ணாள்.

[நாள் நாளும் — நாள் தோறும். நல்கிய — அன்போடு செய்து வருகின்ற. காவல் நனிமூதூர் — பாதுகாப்பிலுள்ள மிகப் பெரிய அந்த ஊரின். வாணாள் அன்னாள் — வாழ்நாளை ஒத்தவளாகிய அதிதேவதை. போவதின் மேலே வழி நின்றாள்—அனுமன் போகும் வழிமேலே நின்று கொண்டிருந்தாள். சுடரோனை—சூரியனை. காணு வந்த — கண்டு பற்றிக் கொள்ள வந்த. கட்செவி — பாம்பு; (இங்கே) ராகு கேது என்னும் பாம்பு. கனல் கண்ணாள் — விஷாக்கினியாகக் கோபாக்கினி ஜொலிக்கின்ற கண்களையுடைய லங்கிணி.]

இலங்கையின் ஆவியே ஒரு வடிவங் கொண்டு அனுமன் போகும் வழி மேலே நின்று விஷாக்கினி கக்கும் கண்களுடன் அவனை நோக்கி நிற்கிறதாம், படமெடுத்த பாம்பு போலச் சீறியவண்ணம். வெண்ணிற மேனியனா அனுமன் அந்தப் பால் வெண்ணிலவிலே மகா தேஜஸ்வியாகச் சுடர்கின்றான் என்பதும், சிந்தனையில் மூழ்கியவனாய்த் தலைதாழ்ந்த வண்ணம் கை தேர்ந்த சிற்பிகள் இயற்றி வைத்த இரு தூண்களைப் போல உருண்டு திரண்ட தோள்கள் விளங்க வருகின்றான் என்பதும் குறிப்பு.

நாம் இனி அந்தக் கோர சொரூபத்தைத் தெளிவாய்க் காண்போம்.



404. லங்கிணியும், வரவேற்பும்

அரக்கர்களின் ஆதிக்கம் நாலு திக்குகளிலும் முட்டி எட்டுக் கோணங்களையும் பயமுறுத்துகிறது. மூன்று லோகங்கள் ஏழு லோகங்கள் என்றெல்லாம் வருணிக்கிறோமே, அந்த ஸ்தூல சூட்சம லோகங்களை யெல்லாம் ராட்சஸ பீதி பேயாட்டம் ஆட்டி வைக்கிறது. ராவணனுடைய புகழொளியும் மாட்சிமையும் திக்கொடு திக்கின் அந்தங்களையும் பீறிச் சீறுகின்றன.

'நானே இலங்கை!'

இது இலங்கையின் நிலை, அனுமன் பிரவேசிக்கும்போது. இலங்காதேவியின் இயல்பும் இது :

எட்டுத் தோளாள்,
நாலு முகத்தாள்,
உலகேழும்
நோட்டுப் பேரும்
சோதி நிறத்தாள்,
சுழல்கண்ணாள்,
முட்டிப் பேரின்
மூவுல கத்தை
முதலோடும்
கட்டிச் சீறும்
காலன் வலத்தாள்,
கமை இல்லாள்.

[பேரும்—திரும்பும்; பிரதிபலிக்கும். சுழல் கண்ணாள் — சுழன்று வட்டமிடுகின்ற கண்பார்வை யுடையவள். முட்டிப் பேரின் - பகைத்துத் தாக்கினால். முதலோடும் - அடியோடும். காலன் வலத்தாள் - யமன் போன்ற வலிமையுள்ளவள். கமை - க்ஷமை; பொறுமை.]

லங்காதேவியின் எட்டுக் கைகளும் பிடித்திருக்கின்ற ஆயுதங்களைத்தான் பாருங்கள். ஒரு பானைச் சோற்றிலே சிற்சில பருக்கைகளை எடுத்துப் பதம் காட்டுவது போல், இலங்கை அரக்கர்களின் கொலைக் கருவிகளை இவள் கைகளில் காட்டுகிறான் கவி. அந்தக் கோரப் பற்களும் அறிவைப் புகைக்கும் கோபாக்கினியும்கூட அரக்கர் தோற்றம் தானே :

வேல், வாள், சூலம்
வெங்கதை, பாசம்
விளிசங்கம்,

கோல், வாள் குந்தம்
கொண்ட கரத்தாள்,
வடகுன்றம்

போல்வாள், திங்கட்
போழின் எயிற்றுள்,
புகைவாயிற்
கால்வாள், காணின்
காலனும் உட்கும்
கதமிக்காள்.

[வெங்கதை — கொடிய கதாயுதம். பாசம் — யம பாசம் போன்ற பாசக் கயிறு. விளி சங்கம் — முழங்குகிற சங்கு. கோல் — தடி.. வாள் குந்தம் — (இங்கே) ஒளி பொருந்திய ஈட்டி. கொண்ட கரத்தாள் — பிடித்துக் கொண்ட கைகளையுடையவள்; மேலே சொன்ன எட்டுப் போர்க் கருவிகளையும் கொண்ட எட்டுக் கைகளையுடையவள். வட குன்றம் போல்வாள் — வடக்கிலுள்ள இமய மலை போன்றவள். திங்கள் போழின் எயிற்றுள் — சந்திரனின் பிளந்த துண்டுகள் போன்ற கோரப் பற்களையுடையவள்; சந்திர பிம்பத்தை இரண்டு துண்டாகப் பிளந்து வைத்திருப்பது போன்ற கோரப் பற்களையுடையவள். புகை வாயின் கால்வாள் — புகையை வாயினால் (சுருட்டின் உதவியில்லாமலே) கக்குவது போன்ற உக்கிர மிகுதி உள்ளவள். காணின்—கண்ணிலே கண்டு விட்டால். காலனும் உட்கும் — காலனும் அஞ்சுகிற, கதம் — கோபம். மிக்காள் — மிக்கவள்.]

ராம லட்சுமணர்களைக் கிஷ்கிந்தா காண்டத்திலே சுக்கிரீவன் முதன் முதல் பார்க்கிறானல்லவா—? அப்போது அவர்கள் அவன கண்ணுக்கு எப்படித் தோன்றுகிறார்கள்? படைப்புக் காலந் தொட்டு அன்றுவரை உலகமெல்லாம் செய்திருந்த பாக்கியம் அவ்வளவும் ஒரு சேரத் திரண்டு குவிந்து இரு வடிவங்களாகி வீரத் தோள்களுடன் வெளிப்பட்டது போலத் தோன்றியதல்லவா சுக்கிரீவனுக்கு?

இன்று அனுமனை எதிர் நோக்கும் லங்கிணியின் தோற்றமோ, நீண்டகாலமாக இலங்கை யரக்கர்கள் உலகத்திற்குச் செய்து வந்திருக்கும் கொடுமையெல்லாம் ஒரு சேரத் திரண்டு குவிந்து ஒரே வடிவமாகி விட்டது போலிருக்கிறதாம்.

ஆனால் சுக்கிரீவன் நோக்கி நோக்கி நின்று கண்ட காட்சி அது. இங்கே அனுமனோ இன்னும் லங்கிணியைப் பார்த்து விடவில்லை. அவள்தான் அவனைப் பார்க்கிறாள்.

ஆஹா, என்ன ஜாக்கிரதை!

ஆம், ஆலோசனையில் மூழ்கிச் சென்று கொண்டிருக்கும் அனுமன் முதல் முதல் லங்கிணியைப் பார்க்காம லிருப்பதும், காவலிலே கண்ணுங் கருத்துமா யிருக்கும் அவளே இவனைப் பார்த்து விடுவதும் இயல்பு தானே:

பாரா நின்றாள்
எண்டிசை தோறும்
'பலர் அப்பால்
வாரா நின்று
ரோ?' என; மாரி
மழையே போல்
ஆரா நின்றாள்;
நூபுரம் அச்சம்
தருதாளாள்,
வேரா மெய்யாள்,
மின்னின் இமைக்கும்
மிளிர் பூணாள்.

[பாரா நின்றாள் - பார்த்து நின்றாள். வாரா நின்றாரோ - வருகின்றார்களோ. மாரி மழை - மழை பொழியும் மேகம். ஆரா நின்றாள் - ஆரவாரம் செய்கின்றாள். நூபுரம் - காலின் சிலம்பு; பாதசரம். தாளாள் - கால்களை உடையவள். வேரா மெய்யாள் - வேர்வை உண்டாகும் உடம்பை உடையவள். மின்னின் - மின்னல் போல. மிளிர் - (நட்சத்திரங்கள் போல்) இமைத்து ஒளி செய்கிற. பூண் - ஆபரணங்கள்.]

அனுமன் ஒருவன் வரக் கண்டதும், 'பின்பலமாகப் பட்டாளம் பட்டாளமாய்ப் பலர் அப்பால் வந்து கொண்டிருக்கிறார்களோ?' என்று லங்காதேவி தூரத்தில் பார்வையைச் செலுத்திப் பார்க்கிறாள், தன் இடித் தொண்டையைக் கனைத்துக் கொண்டு.

அப்படியும் இப்படியும் திரும்பிப் பார்க்கும்போது ‘கலீர் கலீர்’ என்று முழங்குகின்றன பாதசரங்கள், அஞ்சா நெஞ்சங்களும் அதிர்ந்து குலுங்கும்படி.

தன்னுடைய ஸர்வ ஜாக்கிரதையான காவலிலும் அவ்வளவு தைரியமாக ஒருவன் வரக்கூடுமா என்ற நினைப்பிலே உடம்பு வேர்க்கிறது. அந்த உடம்பிலே வைர நகைகள் மிளிர்கின்றன. வேறு இரத்தின நகைகள் பளிச்சுப் பளிச்சென்று மின்வெட்டுகின்றன — வானத்திலுள்ள நட்சத்திரங்களும் மின்னல்களும் வந்து இறங்கி இவள் மேனியை மொய்த்துக் கொண்டனவோ!—என்று பிரமிக்கும்படி.

மும்மூர்த்திகளும் ஒரே மூர்த்தியாகி......

இத்தகைய ஆபரண ஆயுதப் பகட்டும் படாடோபங்களும், வேறு அலங்காரங்களும் கூட, இந்த மேனியில் பயங்கரங்களாகவே ஜொலிக்கின்றன!

இம் மேனியில் பரிமளிக்கும் செஞ்சந்தனக் குழம்பும், தன்னல இன்பச் சேற்றில் உழன்று கொண்டிருக்கும் ராட்சஸ ராஜதானியின் போக இச்சைகளுக்கு அறிகுறியாகிப் பயங்கரத்தை அதி பயங்கரமாய்க் காட்டுகிறது.

அரக்கர் பேரூரின் பொருள், போகம், வேகம் என்னும் மும்மூர்த்திகளும் ஒரே மூர்த்தியாகிக் காட்சி தருவதுபோல் அமைந்த இந்த அதிதேவதையின் தெய்வ நிலையையும், அது குலைகின்ற நிலையையும் ஒருங்கே காண்கின்றோம், இந்தச் செய்யுளின் சப்த சித்திரத்திலேயே :

சிந்தா ரத்தின்
செச்சை யணிந்தாள்,
தெளிநூல்யாழ்

அந்தா ரத்தின்
நேர்வரு சொல்லாள்,
அறைதும்பி





கந்தா ரத்தின்
இன்னிசை பாடிக்
களிகூரும்
மந்தா ரத்தின்
மாலை யலம்பும்
மகுடத்தாள்.

[சிந்து - சிந்துகின்ற; வாசனையை வாரிச் சிதறுகின்ற. ஆரத்தின் செச்சை - செஞ்சந்தனக் குழம்பு. அணிந்தாள் - பூசியவள். தெளி - தெளிவான. நூல் யாழ் - சங்கீத நூலுக்கு ஏற்ற யாழ் அல்லது வீணை. யாழ் அந்தாரம் - யாழில் வாசிக்கப் படுகின்ற தாரம் என்னும் அழகிய இசை. அந்தாரத்தின் நேர்வரு சொல்லாள் - அழகிய தாரமென்னும் இசைக்கு ஈடாகச் சொற்களைப் பேசக்கூடியவள். அறை தும்பி - ஒலி செய்கின்ற வண்டு. கந்தாரத்தின் இன்னிசை பாடி - காந்தாரம் என்னும் பண்போல இனிமையான இசைப் பாட்டைப் பாடி. களிகூரும் - வெறி கொள்வதற்கு இடமான. மந்தாரத்தின் மாலை - மந்தாரம் என்னும் தேவலோக விருட்சத்தின் மலர்களாலாகிய மாலை. அலம்பும் - அசையப் பெற்ற. மகுடத்தாள் - முடியை உடையவள்.]

ஆர்ப்பாட்டமும், அமைதியும்

இவள் மகுடத்திலே சூடியிருக்கும் தெய்வ மலர்மாலையை வண்டுகள் மொய்ப்பது இயல்பன்று. ஆனால் இப்போது இம்மாலையில் அபசகுனமாக வண்டுகள் இன்னிசை பாடிக் களிகூர்ந்து வெறி கொண்டிருக்கின்றனவாம். இவளது தெய்வ வெறியும் இரக்கமிலா அரக்கநெறியும் நிலை குலைந்து போகும் சந்தர்ப்ப மல்லவா?

உலகங்களை யெல்லாம் முட்டி வென்று வெட்டியும் கட்டியும் ஆளும் ராட்சஸ மகா ராஜ்யத்தின் இந்த அதிதேவதை பயங்கரங்களின் உறையுள். பயங்கரங்களெல்லாம் ஒன்றாய்த் திரண்டு சிறுவது போலச் சுழன்று ஜொலிக்கின்றன கண்கள்.

இத்தகைய லங்கிணி அதட்டிக் கொண்டு அனுமனுக்கு எதிரே போகின்றாள் திடீரென்று. 'ஐயோ லங்கிணி!' என்று அலறிச் சாக வேண்டியது தானே? ஆனால் அனுமன் செய்வதென்ன, பார்க்கலாம்:

எல்லாம் உட்கும்
ஆழி இலங்கை
இகல்மூதூர்
நல்லாள், அவ்வூர்
வைகுறை ஒக்கும்
நயனத்தாள்,
'நில்லாய், நில்லாய்'
என்றுரை நேர்வாள்,
நினையாமுன்
வல்லே சென்றாள்;
மாருதி கண்டான்,
'வருகெ'ன்றான்.

[எல்லாம் உட்கும் - எல்லாப் பிராணிகளும் நடுங்கும்படியான. ஆழி இலங்கை - கடல் சூழ்ந்த இலங்கை. இகல் மூதூர் - வலிமை கொண்ட பெரிய ஊர். மூதூர் நல்லாள் - ஊரின் அதிதேவதையாகிய பெண் தெய்வம். அவ்வூர் வைகு உறை ஒக்கும் நயனத்தாள் - அந்த ஊர் முழுவதும் தங்கும்படியான உறை போன்ற கண்களை உடையவள்; அவ்வூரைக் கண்களாகிய உறையில் வைத்துக் காவல் செய்பவள். நில்லாய், நில்லாய் - நில்லு, நில்லு. உரை நேர்வாள் - அதட்டிப் பேசுகிறவளாய். நினையா முன் - நினைத்தற்கு முன்பு. வல்லே - விரைவில். வருகென்றான் - வருக என்றான்; 'வா அம்மா!' என்று அமைதியாக வரவேற்றான்.]

'நில்லு நில்லு' என்ற எச்சரிக்கை ஒரு கணம்; அடுத்த கணமே, அனுமன் சிந்தனை கலைந்து, 'இது என்ன கோஷம்!' என்று கண்களை மலர விழித்துப் பார்ப்பதற்கு முன்பே கண்ணெதிரே வந்து விடுகிறது உக்கிர சொரூபம்.

எதிரி திடுக்கிடாமல் சமாளித்துக் கொண்டது மட்டுமா?—திகைப்பையும் உள்ளடக்கிக்கொண்டு எவ்வளவு அமைதியாக வரவேற்கிறான். என்ன இரத்தினச் சுருக்கமான வரவேற்பு!

சுந்தர ராமாயணம். பி.ஸ்ரீ

405. அனும - லங்கிணி சம்பாஷணை

'நில்லு, நில்லு' என்று ஒரு தடவைக்கு இரு தடவையாக அதட்டி எதிரே வந்தவளை நோக்கி, 'வருக' என்று அமைதியாக அனுமன் வரவேற்ப துடன் ருசிகரமான சம்பாஷணை ஒன்று ஆரம்பமாகிறது.

'சைவ சுத்த போஜனமும் சாதுரியப் பார்வைகளும்'

சாந்தமான வரவேற்பும், அனுமனது சாதுரியப் பார்வையும், லங்கிணி தேவிக்குக் கொஞ்சமும் பிடிக்க வில்லை. இந்த அஞ்சாமையை அறியாமை என்றே இகழ்கிறாள். இவ்வளவு கோளாறுக்கும் காரணம் அனுமன் உட்கொள்ளும் 'சைவ சுத்த போஜனம்' தான் என்று கூட ஊகிக்கிறாள் :

'ஆகா செய்தாய் ;
அஞ்சலை போலும்
அறிவில்லாய் !
சாகா மூலம்
தின்றுழல் வ்ர்பால்
சலம் என்னும் ?
பாகார் இஞ்சிப்
பொன்மதில் தாவிப்
பதையாதே,
போகாய் !' என்றாள்
பொங்கனல் என்னப்'
புகை கண்ணாள்.

[ஆகா செய்தாய்—ஆகாத காரியம் செய்தாய், சாகா மூலம்—இலைகளும் கிழங்குகளுமான மரக்கறி உணவு: 'சாக—மூலம்' என்பது வட மொழி. உழல் வார்பால்—திரிபவரிடத்தில். சலம்—கோபம். என்னும் — எதற்காக. பாகு ஆர்—அழகு அமைந்த. இஞ்சிப் பொன் மதில்—பொன்மயமான இம்மதில். பொங்கு அனல் — பொங்கி எரியும் நெருப்பு. புகை கண்ணாள்—புகைகின்ற கண்களை உடையவள்.]

'இந்த மரக்கறி — போஜனக்காரனிடம் கோபம் என்ன வேண்டி யிருக்கிறது !' என்று தன்னைத் தானே ஒரு கணம் நொந்து கொள்வது போலப் பேசுகிறாள். இப்படிப் பேசும் போதே கோபம் உக்கிர தாண்டவ மாடுகிறது, குரலிலும் கண்களிலும். கர மாமிசமும் ஜீர்ணிக்கிற குடல்—வலிமை வாய்ந்த அரக்கருடன் உறவாடுகிறவளல்லவா ?

'உடல் வளமின்றி உயிர் சுமந்துழலும் அற்பக் குரங்கே ! உனக்குத் தான் என்ன அசட்டுத் துணிவு ! ஓடிப் போ, ஜல்தி !' என்று, அனுமன் தப்பிப் போவதற்கும் ஒரு சந்தர்ப்பம் அளிக்கின்ற லங்கிணி—பராக்கிரமத்தைப் பாருங்கள்.

அனுமனுடைய பராக்கிரமமோ இதற்கும் மேலே மேலே போக வேண்டு மல்லவா ? எவ்வளவோ அமைதியாக நடந்து கொள்ள முயன்ற அனுமனுக்கும் கோபம் வராமல் இல்லை : சிலையா ? உணர்ச்சி—மலையல்லவா ? ஆனால் இவன் கோபத்தை உள்ளடக்கிக் கொள்ளும் ஆற்றலும் பயிற்சியும் பெற்றிருக்கிறான்.

எனவே வெகு வினயமாய்ப் பதில் சொல்ல விரும்புகிறான்.

உங்கள் தயவினால்......

இந்த உள்ளத்தையும் உரையையும் ஒருங்கே 'படம்' பிடித்துக் காட்டும் செய்யுள்:

களியா உள்ளத்(து)
அண்ணல் மனத்தில்
கதம்மூழ்க,
விளியா நின்றே
நீதி நலத்தின்
வினைஓர்வான்,
'அளியால் இவ்வூர்
காணும் நலத்தின்
அணைகின்றேன்,
எளியேன் உற்றால்
யாவ துனக்கிங்(கு)
இழவெ'ன்றான்.

[களியா உள்ளத்து அண்ணல் — களிப்புக் கொள்ளாத உள்ளத்தையுடைய பெரியோன்; சாதாரணமாய்க் களித்துச் சிரிக்கக் கூடிய மனப்பான்மையில்லாத பேராசிரியப் பண்பிலே பயிற்சி பெற்றுள்ள அனுமன். மனத்தில் கதம் மூழ்க — உள்ளத்தில் உண்டாகும் கோபம் வெளிப்படாது உள்ளத்தினுள்ளே அடங்கி மூழ்கிக் கிடக்க. விளியா நின்றே — (மீண்டும் அவளை) அழைத்து. நீதி நலத்தின் — நல்ல நீதி நெறியிலே. வினை ஓர்வான் — (எதிர்ப்பவளது) நிலையையும் செயலையும் ஆத்திரப்படாமல் ஆய்ந்து உணர்ந்து கொள்ளும் பொருட்டு. அளியால் — (உங்கள்) தயவினால். காணும் நலத்தின் — காண வேண்டுமென்னும் ஆசையால். அணைகின்றேன் — வந்து சேர்ந்திருக்கிறேன். எளியேன்—எளியவனான நான். உற்றால் — (இவ்வூருக்குள்) போனால். யாவது உனக்கு இங்கு இழவு—இதனால் உனக்கு வந்த நஷ்டம் தான் என்ன. என்றான் — என்று கேட்டான்.]

சாதாரணமாய்ச் சிரிப்பு வராத முகம்; இந்த முகத்திலே கோபத்தையும் காட்டிக் கொள்ளவில்லையாம். திடீரென்று தண்டோபாயத்தைக் கைக்கொள்ளாமல் நியாயமாகப் பேசி இந்த அம்மாளின் மனநிலையையும் செயலையும் உணர்ந்து கொள்ள விரும்புகிறான். விரும்பி, அவளை அழைத்துப் பேசுகிறானாம்.

'ஏனம்மா இந்தக் கோபம்? உங்களைத்தானே கூப்பிடுகிறேன். எல்லாம் உங்கள் தயவைத்தான் பொறுத்திருக்கிறது. நீங்கள் தயவு செய்தால் இந்த ஊரைப் பார்த்துப் போகிறேன். இந்த இலங்கையைப் பார்க்க ஆசைப்பட்டு வந்திருக்கிறேனம்மா!' என்று தொடங்கிய பதில் வார்த்தை எப்படி முடிகிறது பாருங்கள்:

எளியேன் உற்றால்
யாவ துனக்கிங்(கு)
இழவென்றான்.

'நான் தயவு செய்தால்?'

இப்படி அனுமன் பேசியதும் லங்கிணியின் நிலைமைதான் என்ன?

என்று முன்னம்,
'ஏகென ஏகா(து),
எதிர்மாற்றம்
சொன்னாயே! நீ
யாவனடா? தொல்
புரம்அட்டான்
அன்றேனும்
அஞ்சுவர் எய்தற்(கு);
அளியுற்றால்,
உன்னால் எய்தும்
ஊர்கொல் இவ்வூர்?'என்(று)
உறநக்காள்.



[என்று முன்னம் — என்று அனுமன் சொன்னது தான் தாமசம்; அவ்வளவு சீக்கிரமாக. ஏகு என ஏகாது — 'போ' என்று நான் கட்டளையிடவும் நீ போகாமல். எதிர் மாற்றம் — எதிர் வார்த்தை. யாவ

ணடா — யாரடா. தொல்புரம் அட்டான் அன்னறேனும் — பழமையான திரிபுரத்தை எரித்த உக்கிர அழிவுச்சக்தி கொண்ட சிவபிரானைப் போன்றவர் களே யானாலும். அஞ்சுவர் எய்தற்கு — இந்த ஊருக்குள் வரப் பயப்படுவார்கள். அளி உற்றால் — நான் தயவு செய்தால். உன்னால் எய்தும் ஊர்கொல் இவ்வூர் — இந்த ஊர் உன்னால் போய்ப் பார்க்கத் தக்க ஊர்தானோ. என்று உற நக்காள் — என்று சொல்லி மிகுதியாகச் சிரித்தாள்.]

படரும் சம்பாஷணை

'போ என்று நான் சொல்லியும் போகாமல் எதிர்வார்த்தை யாடுகிறாயே, யாரடா நீ?' என்று பொங்குகிறது ஒரு பரிகாசப் பேய்ச் சிரிப்பு. அப்போது



அனுமனுக்கும் ஓர் எதிர்ச்சிரிப்பு வந்து விடுகிறதாம்; அடக்குகிறான் உள்ளுக்குள்ளே. பிறகு என்ன நடக்கிறது, சம்பாஷணை எப்படிக் கொடியேறித் திரும்புகிறது, பாருங்கள்:

நக்காளைக்கண்(டு),
ஐயன் மனத்(து)ஓர்
நகைகொண்டான்;
'நக்காய்! நீ யார்?
யார்சொல வந்தாய்?
உன(து)ஆவி
உக்கால் ஏதாம்?
ஓடலை!' என்றாள்;
'இனி இவ்வூர்
புக்கால் அன்றிப்
போகிலென்!' என்றான்,
புகழ்கொண்டான்.

[நக்காளை — சிரித்தவளான லங்கிணியை. ஐயன் — சிறந்தவனான அனுமன். மனத்து ஓர் நகை கொண்டான் — உள்ளுக்குள்ளே ஒரு சிரிப்பைக் கொண்டான். நக்காய் — சிரித்தவனே; சிரித்த குரங்கே. சொல — சொல்ல. உனது ஆவி உக்கால் ஏதாம் — உன் உயிர் ஒழிந்து போனால் என்ன பயன் அப்பா. ஓடலை - இன்னும் ஓடிப் போக வில்லையே. புக்கால் அன்றி — புகுந்த பின் அல்லது. போகிலென்—திரும்பிப் போக மாட்டேன்.]

வார்த்தைக்கு எதிர்வார்த்தை, சிரிப்புக்கு எதிர்ச்சிரிப்பு. இது கண்ட லங்கிணி, 'சிரித்தவனே, நீ யார்?' என்று ஒரு கேள்வி போடுகிறாள்.

'ஐயோ பாவம், உயிர் போய் விட்டால் ஆவது என்ன? சாக — மூலம் சாட்பிட முடியாதே, அப்பனே!' என்று இந்த ஆத்மாவுக்காக அந்த ஆத்மா பரிதவிக்கிறது!

திடீரென்று பரிகாசத்தை நிறுத்தி விட்டு, "இன்னும் ஓட வில்லையே!' என்று அவசரப்படுத்துகிறாள். அனுமனோ கொஞ்சமும் அவசரப்படாமல், 'நீ இவ்வளவு சொன்ன பின்பு, இந்த ஊரைப் போய்ப் பார்த்து விட்டுத்தான்

போவதென்று தீர்மானம் !' என்று பரம சாந்தமூர்த்தியாக நின்று உறுதிமொழி கூறி முடித்து விட்டான்.

ஒரு தனிமையுரை

சம்பாஷணை முடிந்து விடுகிறது. இனிமேல் நடக்கவேண்டியது பேச்சல்ல, செயல்—போர். அந்தப் போருக்கும் இந்தப் பேச்சுக்கு மிடையே லங்கிணியின் தனிமையுரை. சிந்தைக்குள்ளே பேசிக்கொள்கிறாள் :

'வஞ்சம் கொண்டான்,
வானரம் அல்லன் ;
வருகாலன்
துஞ்சும் கண்டால்
என்னை ; இவன், சூழ்
திரைஆழி
நஞ்சம் கொண்ட
கண்ணுதலைப்போல்
நகுகின்றான்'—
நெஞ்சம் கண்டே,
கல்லென நின்றே,
நினைவுற்றாள்.

[வரு காலன்—அந்திம காலத்தில் வருகின்ற யமன். துஞ்சும் கண்டால் என்னை – என்னைக் கண்டால் காலனே செத்துப் போவான். சூழ் திரை யாழி நஞ்சம் – சுற்றிலுமுள்ள அலைகளையுடைய பாற்கடலில் தோன்றிய விஷம். கொண்ட – உட்கொண்ட. கண்ணுதலைப்போல் – நெற்றிக் கண்ணனாகிய சிவபெருமானைப் போல். நகுகின்றான் – சிரிக்கின்றான் (என்று தனக்குள் தானே சொல்லிக் கொண்டு). நெஞ்சம்கண்டே– அந்த அனுமனது நெஞ்சைக் கண்டே. கல்லென நின்றே – கல்லைப் போல் ஸ்தம்பித்து நின்று. நினைவுற்றாள் – பிறகு நினைத்துப் பார்ப்பவளானாள்.]

'இனி இவனைக் கொல்ல வேண்டியது தான்' என்று திர்மானித்தவளாய், 'நீ வல்லவனானால் கோட்டை வாசல் வழியாக அல்லவா போக வேண்டும் ?' என்று சொல்லிக் கொண்டே, தன் கையிலுள்ள சூலாயுதத்தை எறிந்தாள் அனுமனை நோக்கி. இப்படித் தொடங்கிய போரைப் பார்க்கலாம்.

மின்னலைப் போல ஜொலித்துக் கொண்டு தன்னைக் கொல்ல வந்த சூலாயுதத்தைத் தன் கைகளால் ஒடித்தெறிந்து விட்டான் அனுமன். அவளோ நெருப்பைப் போல ஜொலித்தவளாய் வேறு ஆயுதங்களைக் கொண்டு அனுமனைக் கொல்ல முயன்றாள். இவனோ அவளைக் கொல்லாமல் வெல்லக் கருதியவனாய் அவளுடைய ஆயுதங்களை யெல்லாம் தன் கைகளால் பிடித்துக் கொண்டு அவள் மேல் எறியாமல் வானத்தில் எறிந்து விட்டான்.

அது கண்ட லங்கிணிக்குக் கோபம் உச்ச நிலைக்கு ஏறி விட்டது. இடிபோல் அதட்டிக் கொண்டு தன் கைகளை உயரத் தூக்கி அனுமன் மேல் அடித்து விட்டாள். அந்தக் கைகளோ குன்றுகளைப் பந்துகளாக அடித்துப் பழகிய கைகள். இந்தத் தேகமோ குன்றுகளையும் வென்று வலியழிக்கத் தக்க வஜ்ர தேகம். அடித்த அடியில் தீப்பொறிகள் பறந்தனவாம், கற்பாறையில் ஒரு பெருங் கல்லையோ இரும்பையோ கொண்டு தாக்கும் போது ஏற்படுவது போல.

அப்பால் அனுமன் அவளுடைய எட்டுக் கைகளையும் தன் ஒரு கையால் சேரப் பிடித்துக் கொண்டு, 'பெண்ணல்லவா ? கொல்லலாகாது' என்று மற்றொரு கையால் ஒரு அடி கொடுத்தான். உடனே இடி விழுந்த மலைப் பாறை போலச் சரிந்து விழுந்து விட்டாள்.

விழுந்தாள், நொந்தாள்
வெங்குருதிச் செம்
புனல் வெள்ளத்(து)
அழுந்தா நின்றாள்,
நான்முகனார்தம்
அருளன்றி
எழுந்தாள், யாரும்
யாவையும் எல்லா
உலகத்தும்
தொழும்தாள் வீரன்
தூதுவன் முன்னின்(று)
இவை சொன்னாள்.

[வெங்குருதி-வெப்பமுள்ள இரத்தம். செம்புனல்—செந்நீர். தொழும்தாள் – தொழுகின்ற திருவடிகளையுடைய.]

சுந்தர ராமாயணம்.

பி. ஸ்ரீ

406 அனுமன் கண்ட நாடகங்கள்

தோல்வியுற்ற லங்கிணி தன்னை இன்னுனென்று தெரிவித்துக் கொண்டு விடைபெற்றுப்போவது மூன்று பாடல்களில் சொல்லப்படுகிறது. இதற்கு முன் அவன் பேசிய தோரணைக்கு இப்போது பேசும் முறை எவ்வளவு தூரம் மாறுபட்டிருக்கிறது என்பதைக் கவிதையில் விருத்தப் போக்கே காட்டி விடுகிறது.

லங்கிணி நாடகம் முடிந்தது

கீழே விழுந்து அடிபட்டுக் காயம் பட்ட கிழவன் ஒருவன் கோலூன்றி எழுவதுபோல் சிரமத்துடன் 'நான்முகனுர் தம் அருள் ஊன்றி' எழுந்து ராம தூதன் முன்னின்று பணிமொழி கூறத் தொடங்குகிருள் :

'ஐய,கேள் வையம்
நல்கும் அயன் அருள்
அமைதி யாக,
எய்தி இம் மூதூர்
காப்பென் : இலங்கைமா
தேவி என்பேர் ;
செய்தொழில் இழுக்கி
உள்ளம் திகைத்திந்தச்
சிறுமை செய்தேன்.
'உய்தி' என்(று) அளித்தி
ஆயின், உணர்த்துவல்
உண்மை' என்ருள்.

[வையம் - உலகம். நல்கும் - படைக்கிற. அயன் அருள் அமைதியாக - பிரம்மாவின் கட்டளை காரணமாக. இம் மூதூர் காப்பென் - இப்பழமையான ஊரைக் காத்துவருகிறேன். இழுக்கி - தவறி. உய்தி - உயிர் வாழ்வாய். அளித்தி ஆயின் - அருள்செய்வாயானல். உணர்த்துவல் - தெரிவிப்பேன்.]

'எனக்கு உயிர்ப்பிச்சை கொடுத்தால் நான் உனக்கு உண்மை உணர்த்துவேன்' என்று சொல்லி நிறுத்திய லங்கிணி, அனுமனுடைய மௌனத்தை அனுக்கிரகமாய்க் கொண்டு மேலும் பேசுகிருள் :

'எத்தனை காலம்
காப்பல் யான் இந்த
மூதூர் ?' என்று
முத்தனை வினவி —
னேற்கு, 'முரண்வலிக்
குரங்(கு)ஒன்று உன்னைக்
கைத்தல மதனுல்
தீண்டிக் காய்ந்தஅன்(று)
என்னைக் காண்டி :
சித்திர நகரம்
பின்னைச் சிதைவது
திண்ணம்' என்ருள்.

[காப்பல் - காப்பேன். முத்தன் - (இங்கே) பிரம்மதேவன். வினவினேற்கு - வினவின எனக்கு. முரண்

- மிக்க வலிமை. காய்ந்த அன்று - ...ந்திய அந்நாளில். காண்டி - காண் ...ய். சித்திர நகரம் - அழகிய இலங்கை.]

'ஒரு மூட்டுக் குரங்கு உன்னைத் தோற்கடிக்கும்' என்று பிரம்மா தன்னிடம் சொன்னதை அனுமனிடம் லங்கிணி நாசூக்காய்க் குறிப்பிடாமல், அப்படியே உள்ளது உள்ளபடியே வெளியிடும் பாவம் இச்செய்யுளிலே தொனிக்கிறது.

கடைசியாக அனுமனைப் புகழ்ந்து உத்ஸாகப்படுத்தி விடையளித்துத் தானும் விடைபெற்றுக் கொள்கிறாள் :

அன்னதே முடிந்த(து)
ஐய? 'அறம்வெல்லும்,
பாவம் தோற்கும்'
என்னும் ஈ(து)இயம்ப
வேண்டும் தகையதோ?
இனிமற்(று) உன்னால்
உன்னிய எல்லாம்
முற்றும்: உனக்குமுற் -
றாத துண்டோ?
பொன்நகர் புகுதி
என்னாப் புகழ்ந்(து),அவள்
இறைஞ்சிப் போனாள்.

[அன்னதே - அதுவே; பிரமன் சொன்னபடியே. ஈது - இது; இவ்வுண்மை. தகை - தன்மை. உன்னிய எல்லாம் - நினைக்கப்பட்ட காரியம் எல்லாம். முற்றும் - முற்றப் பெறும். புகுதி - போவாய். என்னா - என்று சொல்லி. இறைஞ்சி - வணங்கி.]

'அறம்வெல்லும், பாவம் தோற்கும்' என்று லங்கிணி சொன்னதை ஒரு குருவின் உபதேசம் போல் ஏற்றுக்கொண்டு ராமன் திருவடிகளை உள்ளத்திலே வணங்கி மதிலைத் தாண்டி ஊருக்குள் குதித்து விடுகிறான் அனுமன்.

இலங்கை மாதேவியின் வீழ்ச்சி இலங்கை மாநகரின் வீழ்ச்சிக்கு ஒரு முற்குறி. ஆரம்பத்திலேயே ராவண ராஜ்யத்தின் ஆடம்பர வைபவங்களையும் கட்டுக் காவல்களையும் கண்டு ஒருவாறு திகைத்த உள்ளத்திற்கு லங்கிணியின் போர் ஒரு சமய சஞ்சீவியாக உதவியது. இலங்கைக்குள்ளே பிரவேசிக்கும் அனுமனுக்கு இன்னும் இடையிடையே மயக்கம் விளையப் போகிறது. எனினும் லங்காதேவி தக்க சமயத்தில் நினைப்பூட்டிய 'அறம் வெல்லும், பாவம் தோற்கும்' என்ற உண்மை ஒரு மகா மந்திரம் போல்உள்மனத்திற் பதிந்து இதய கீதமாக ஒலி செய்யத் தொடங்கி விட்டது.

'தர்மமே ஜயம்' என்ற பெரு நம்பிக்கையுடனும் சிறிய வடிவத்துடனும் அனுமன் மதிலைத் தாவி உட்புகுந்தான். உடனே அந்த இலங்கைத் தீவு முழுவதும், மோர்ப் பிரை தெறித்துத் திரிந்து போகும் ஒரு பாற்கடல் போல் சூட்சுமமான மாறுதலை அடையத் தொடங்கி விட்டதாம்.

தேடத் தொடங்குகிறான்

மதிலுக்கு வெளியே யிருந்து இலங்கையைப் பார்த்த அனுமனுக்கு உள்ளே புகுந்ததும் பிரமிப்பு அதிகமாயிற்று. 'சூரியோதயம் ஆகிவிட்டதோ?' என்று கூடப் பிரமித்தான். கூர்ந்து பார்த்து, 'ஓஹோ! சூரியோதயம் இல்லை, மாடமாளிகைகளின் இரத்தின காந்தியல்லவா? சிகர கலசங்களின் ஜோதியல்லவா?' என்று தெளிந்தான்.

இரவைப் பகல் செய்த அந்த அழகைக் கொண்டாடி, 'இத்தகைய வெளிச்சத்திலே வீதிகளின் நடுவில் நான் சென்றால் யாராவது கவனிக்கக் கூடுமே' என்று எண்ணினான். வீடுகளின் நிழல் சாய்ந்திருக்கும் ஓரமாகவே ஒதுங்கிப் போனான்.

அப்படிப்போய்ச் சீதையைப் பல இடங்களிலும் தேடிப் பார்க்கிறான் :

ஆத்துறு சாலை தோறும்,
ஆனையின் கூடந் தோறும்,
மாத்துறு மாடந் தோறும்,
வாசியின் பந்தி தோறும்,
காத்துறு கடைகள் தோறும்;
கருங்கடல் கடந்த காலால்,
பூத்தொறும் வாவிச் செல்லும்
பொறிவரி வண்டிற் போனான்.

[ஆத்துறு சாலை—பசுக்கள் கட்டியிருக்கும் தொழுவங்கள். மாத்துறு மாடம் தோறும் - திருமகள் பொருந்தி வசிக்கும் மாளிகைகள்; அதாவது அழகும் செல்வமும் நிரம்பிய மாளிகைகள். வாசியின் பந்தி - குதிரைகள் கட்டுகிற லாயங்கள். காத்துறு—காவல் அமைந்த. வாவி-தாவி. பொறி - புள்ளி. வண்டின் - வண்டுபோல.]

அனுமனை வெள்ளை வானரமாகப் பிரஸ்தாபிக்கிறது ராமாயணம்: ஆனால், இப்போது ஒரு கணம் கரியனாகவும், மறுகணம் வெள்ளையனாகவும், அடுத்த கணத்தில் சிவப்பனாகவும் வர்ண பேதங்களுடன் காட்சியளிக்கிறான். ஏன் தெரியுமா? மாளிகைகளிலுள்ள நீலம், முத்து, வைரம், பவளம், மாணிக்கம் முதலான இரத்தின வகைகளின் பலவேறு நிறங்களையும் பிரதிபலிக்கிறான்.

நாட்டியக் கச்சேரி

அதோ ஒரு நாட்டியக் கச்சேரியும் பார்க்கிறான் அனுமன். பொன்மயமான நடனசாலை பூம்பந்தல் வேய்ந்து அலங்கரிக்கப் பெற்றிருக்கிறது. கந்தர்வப் பெண்கள் நாட்டிய மாடுகிறார்கள். அனுமன் அந்த நாட்டியம் பார்க்கிறானென்று சொல்வதைக் காட்டிலும், அந்த நாட்டியம் பார்க்கிற அரக்கியரையும் அரக்கரையும் பார்க்கிறான் என்றுதான் சொல்ல வேண்டும்.

அந்த நடனசாலையில் தெய்வமணி விளக்கு ஜில்லென்று ஒளி வீசுகிறது. அது தெய்வலோகத்துச் சிந்தாமணி என்ற இரத்தின தீபம். எந்த எந்த விதமான போகப் பொருள்கள் வேண்டுமென்று சிந்திக்கிறார்களோ, அவற்றை அம் மணிவிளக்கு அவ்வப்போது கொடுத்துக் கொண்டேயிருக்கிறது.

அந்த ஒளியில் மெத்தென்ற படுக்கை மீது சாய்ந்தபடியே ராட்சஸ தம்பதிகள் நாட்டியம் காண்கிறார்களாம். அவர்களைப் பார்த்துக் கொண்டே போகிறானாம் அனுமன்:

சந்தப்பூம் பந்தர்
வேய்ந்த தமனிய
அரங்கில், தந்தம்
சிந்திந்த(து) உதவும்
தெய்வ மணிவிளக்(கு)
ஒளிரும் சேக்கை
வந்துற்ற நிருத
மாக்கள், விளம்பின
நெறிவ ழாமை
கந்தர்ப்ப மகளிர்
ஆடும் நாடகம்
காண்கின் றாரை.



[சந்தம் — அழகு. வேய்ந்த — மேலே இட்டு அலங்கரித்த. தமனிய அரங்கு — பொன் மயமான நடனசாலை. தத்தம்—தம் தம். சேக்கை —படுக்கை. நிருதமாக்கள் — ராட்சஸ ஜனங்கள். விளம்பின நெறி வழாமை — பாராட்டிச் சொல்லப்படும் தாள அடைவு முதலியன தவறாமல்.

கந்தர்ப்ப மகளிர்—கந்தர்வப் பெண்கள். நாடகம் — (இங்கு) நாட்டியம்.]

காதல் நாடகம் I

சில காதல் நாடகங்களும் காண்கின்றான் அனுமன். ராட்சஸ குல சுந்தரிகள் சிலர் தங்கள் கணவருடன் பிணங்கிப் பிரிந்திருக்கிறார்கள். இந்தப் பிரிவுத் துயரத்தைப் பொறுக்க முடியாமல்,

மலர்மிசை மலர்பூத்—
தென்ன மலர்க்கையால்
வதனம் தாங்கி,—

[மலர்மிசை — மலரின் மேல். பூத்தென்ன—பூத்தாற் போல.]

— அப்படியே நெடும் பொழுது பெருமூச்சு விட்டுக் கொண்டிருக்கிறவர்களையும் அனுமன் பார்த்துப் போகிறான்.

காதல் நாடகம் II

வேறொரு காதல் காட்சி. ஓவியப் பாவை போலிருக்கும் அந்தப் பெண் எவ்வளவு களைப்போடிருக்கிறாள்! குறும்பாகச் 'சண்டை போட்டுக் காதலனை வெளியே துரத்திவிட்டாள். ஆனால் அவனோடு அவளுடைய உணர்வும் உள்ளமும் அந்தக்கரணங்களும் போய்விட்டன என்றே தோன்றுகிறது. உயிர் தான் மிச்சம். அவன் வெளியே போனதும் அவள் கோபத்துடன் விரைந்து கதவடைத்துத் தாளிடப் போனாள்.

ஆனால் மின்னற் கொடி போல் உடம்பு துவண்டு தள்ளாடுகிறது. நடை மந்தமாகத்தானிருக்கிறது. கதவை மூடவும் சக்தியில்லை. சிரமப்பட்டு மெள்ள மெள்ள அடைக்க முடியாமல் அடைக்கிறாள்:

ஓவியம் அனைய
மாதர் ஊடினர்,
உணர்வோ(டு) உள்ளம்
மேவிய கரணம்
மற்றும் கொழுநரோ(டு)
ஒழிய, யாணர்த்
தூவியம் பேடை
என்ன மின்எனத்
துவள ஏகி,

ஆவியும் தாமு—
மேசென்(று) அருங்கத(வு)
அடைக்கின் றாரை —

[அனைய — போன்ற. ஊடினர் — ஊடல் கொண்டவர்களாய். மேவிய— பொருந்திய. கரணம் — அந்தக்கரணங்கள். கொழுநரோடு ஒழிய — கணவரோடு போய் விட. யாணர் — அழகிய. தூவி — இறகு. அம் பேடை —அழகிய அன்னப்பேடை. மின் என — மின்னற் கொடி போல. ஏகி — போய்; (இங்கே) நடந்து.]

காதல் நாடகம் III

இன்னும் ஒரு காதற் காட்சி, இதுவும் ஊடல் - காட்சி தான். காதலனைப் பிரிந்து தனியே போய் மெத்தென்ற பூம்பள்ளியில் சயனித்துக் கொள்கிறாளாம் காதலி. எனினும் பிரிவுத் துயரத்தால் சோர்ந்து உயிர் நீங்கிய உடல் போலத்தான் படுக்கையில் சாய்ந்து கிடக்கிறாளாம். காதல் மீண்டும் தூண்ட வழி மேல் விழி வைத்திருக்கிறாள். அப்போது காதலன் தூது விட்ட தோழி ஒருத்தி வருகிறாள்:

அவள் முகத்திலே புன் சிரிப்பை நோக்கியதும் 'உயிரிலா உடல்' போலிருந்தவளுக்கு உயிர் வந்து துடிக்கிறதாம். பார்க்கிறான் அனுமன்,

மாதுயர்க் காதல்
தூண்ட, வழியின்மேல்
வைத்த கண்ணார்,
தூதியர் முறுவல்
நோக்கி, உயிர்வந்து
துடிக்கின் றாரை—

[தூதியர் - காதலரால் தூது விடப்பட்ட மகளிர். முறுவல் – புன்சிரிப்பு.]

'மாதுயர்க் காதல்' தூண்டும் நம்பிக்கையைத் தான் என்னென்பது? ஏன், உயிருக்கே தூண்டுகோல் என்பது குறிப்பு.

அனுமன் கண்ட நாடகங்களை நாமும் கண்டு அனுமனோடு போய்க் கொண்டிருக்கிறோம்.

சுந்தர ராமாயணம்.

407. உறங்கும் மலையும், ஒளிக்கும் தருமமும்

அந்த இரவிலே தான் எத்தனை கொண்டாட்டங்கள் — ஊர்கோலங்கள், கிரகப் பிரவேசங்கள், புது மண வைபவங்கள்! புதுமனைப் பிரவேச விழா ஒன்றைப் பார்த்துவிட்டுப் புதுமண வைபவம் ஒன்றையும் கண்டு போகலாமே.

கிரகப் பிரவேசம்

தேவகீதம் காதில் விழுகிறது, நாக கன்னியரின் வாழ்த்துப் பாடல்களுடன். திடீரென்று வெண்மழை பொழிவது போலவும், அம்மழை கிழிய மின் வெட்டுவது போலவும் ஒரு காட்சி. முத்துக்கள் வேய்ந்த விமானத்தில் போகின்றாள் ஒரு கல்யாணப் பெண். எங்கே?—புதிதாகத் தன் கணவன் மனைக்குத் தான். மணமகள் வீட்டில் மணம் நடந்தேறியது. அங்கிருந்து சுப முகூர்த்தத்திலே போகிறாள், புதிதாகக் கணவனும் தானும் வசிக்க வேண்டுமென்று கட்டப்பெற்றிருந்த ஒரு மாளிகைக்கு.

இந்தக் காட்சியை எவ்வளவு வசீகரமாக வெளியிடுகிறது கவிதை, பாருங்கள்:

கின்னர மிதுனம்
பாட, வெண்மழை
கிழித்துத் தோன்றும்

மின்னெனத் தரளம்
வேய்ந்த வெண்ணிற
விமானம் ஊர்ந்து,

பன்னக மகளிர்
சுற்றிப் பலாண்டிசை
பரவப், பண்ணைப்

பொன்னகர் வீதி
தோறும், புதுமனை
புகுகின் றாரை—

[கின்னர மிதுனம்—ஆணும் பெண்ணுமாகி இரட்டையாய் நிற்கும் கின்னரர் என்ற தேவ வகுப்பினர். மின் என—மின்னல் போல. தரளம்—முத்துக்கள். பன்னக மகளிர்—நாக கன்னிகைகள். பலாண்டிசை—பல்லாண்டு இசை; பல ஆண்டுகள் வாழ வேண்டுமென்று வாழ்த்திப் பாடும் பாடல்கள். பலாண்டிசை பரவ—பல்லாண்டுப் பாடல்கள் பாடி வாழ்த்த. பண்ணை—பெண்கள் கூட்டம்; (இங்கு) பெண்கள் கூட்டத்துடன். பொன்னகர்—அழகிய லங்காபுரி.]

திருமண வைபவம்

இக் காட்சிக்கும் மேலான வசீகரத்துடன் தோன்றுகிறது புது மணக்காட்சி:

கோவையும் குழையும்
மின்னக், கொண்டலின்
முரசம் ஆர்ப்பத்,

தேவர்வந்(து) ஆசி
கூற, முனிவர்சோ—
பனங்கள் செப்பப்,

பாவையர் குழாங்கள்
சூழப், பாட்டொடு
வான நாட்டுப்

பூவையர் பலாண்டு
கூறப் புதுமனம்
புணர்கின் றுரரை—

[கோவை — கழுத்தில் அணியும் ஹாரங்கள். குழை—காதில் அணிவது. கொண்டலின் — மேகம் போல; (இங்கே) மேக கர்ஜனையாகிய இடி முழக்கம் போல. ஆர்ப்ப—ஆரவாரிக்க. பாவையர்—(இங்கே) ரிஷி பத்தினிகள். பூவையர்—கிளி அல்லது நாகணவாய்ப் பறவை போல் கொஞ்சிப் பேசும் பெண்கள். மணம் புணர்கின்றுரரை—மணஞ் செய்து கொள்கிறவர்களை.]

அவர்கள் புதுமனை போகட்டும், இவர்கள் புது மணம் செய்து கொள்ளட்டும் — ஆனால் அனுமனுக்கும் நமக்கும் ஏன் இந்தத் திகைப்பு இப்போது? விவாக விமரிசைகளைக் கண்ட திகைப்புமல்ல; அரக்கர்களும் வைதிகச் சடங்கு செய்கிறார்களே என்ற திகைப்பு மல்ல. ஆனால் அடிமைத் தேவர்கள் ஆசீர்வாதம் செய்வதென்ன? தேவமகளிர் பல்லாண்டு பாடி வாழ்த்துவதென்ன? முனிவர்கள் சோபனம் சொல்வதென்ன? முனி பத்தினிகள் பாடிப் புகழ்வதென்ன?—எல்லாம் திகைப்புக்கும் நகைப்புக்கும் இடமான 'ராஜபக்தி' யல்லவா?

இத்தகைய எத்தனையோ காட்சிகளுக்கிடையே யட்ச ஸ்திரீகள், அரக்கிமார்கள், நாககன்னியர், வித்தியாதர மாதர்கள் முதலானவர்களை யெல்லாம் அனுமன் கவனித்துக் கொண்டே போகிறான். அப்படிப் போய்க் கொண்டிருக்கும் வழியில் திகைப்பிற்கும் மேல் திகைப்பு, ஆச்சரியத்திற்கு மேல் ஆச்சரியம்,—அச்சமும் கூடத்தான், அனுமனுக்கு!

கும்பகர்ண வைபவம்

கவிதை வாயிலாகக் காண்போம் :

இயக்கியர், அரக்கி—
மார்கள், நாகியர்,
எஞ்சில் விஞ்சை
முயற்கறை மலராத்
திங்கள் முகத்தியர்
முதலி னோரை
மயக்கற நாடி
யேகும் மாருதி,
மலையின் வைகும்
கயக்கமில் துயிற்சிக்
கும்ப கருணனைக்
கண்ணிற் கண்டான்.

[இயக்கியர்—யட்சகுல மகளிர். நாகியர்—நாக கன்னிகைகள். எஞ்சில் — குறைவற்ற. விஞ்சை-வித்தை; (இங்கே) வித்தியாதரர்களின் வித்தை. முயல் கறை மலராத் திங்கள் முகத்தியர் — முயல் என்று சொல்லப்படுகிற களங்கம் விளங்காத ஒரு பூர்ண சந்திரன் உண்டானால், அது போன்ற முகத்தை யுடைய வித்தியாதர மாதர்கள். மயக்கு அற—மயக்கம் இல்லாதபடி. ஏகும் — போய்க் கொண்டிருக்கும். மாருதி — அனுமன். மலையின் வைகும் — மலை போலப் பருத்து ஓங்கிய வலிய பெரிய வடிவுடன் படுத்திருக்கும். கயக்கம் — கலக்கம். இல் துயிற்சி—இல்லாத தூக்கம்.]

பலவேறு மாதர்களையும் மயக்கமில்லாதபடி, சந்தேக மில்லாதபடி நன்றாய்க் கவனித்துக் கொண்டே போகிறானும் அனுமன். சந்தேக மில்லாதபடி பார்க்கா விட்டால் பலவகை மகளிர் இருக்கு மிடங்களில் சீதை இல்லையென்று எப்படி நன்றாய் அறிந்து கொள்ள முடியும்? மயக்க மில்லாதபடி நாடவில்லை யென்றால் உள்ளம் கலங்க முற்று லட்சியம் நிறைவேறாமல் போகவும் கூடுமே!

மயக்கமில்லாமல் சென்று கொண்டிருக்கும் வீரமாருதி கலக்க மில்லாமல் துயின்று கொண்டிருக்கும் கும்பகர்ணனைக் கண்டானென்று பொதுவாகக் கூறிவிட்டுக் கவிஞன், அந்தக் காட்சி—விவரங்களை மேலும் வசிகரமாக்கப் பார்க்கிறான். ஏதோ ஒரு விபரீத சக்தி அனுமனை அப்பால் செல்ல வொட்டாமல் ஒரு மண்டபத்தின் வாசலில் நிறுத்தி விடுகிறதாம். காரணம் என்ன

என்று ஆலோசிப்பதற்குள். ஏதோ ஒரு சண்ட மாருதம் வலிய இழுத்துப் போகிறதாம்.

அந்த மண்டபத்தின் நடுவிலே, ஆயிரம் தலை ஆதி சேஷனா? கருங்கடல் தானா? உலகிலுள்ள இருட்டெல்லாம் சேர்ந்து செறிந்து கிடக்கிறதா? தீவினை தான் திரண்டு உருக் கொண்டதா? அந்த ஆசாமியின் மூக்கு வரையில் அனுமனை இழுத்து வந்து விட்டது சண்ட மாருதம் :

மூசிய உயிர்ப்(பு)எனும்
 முடுகு வாதமும்
வாசலின் புறத்திடை

 நிறுவி, வன்மையால்
நாசியின் அளவையின்
 நடத்தக் கண்டவன்

கூசினன், குறித்தனன்,
 விதிர்த்த கையினன் !

[மூசிய — (ஒன்றன் பின் ஒன்றாக) நெருங்கி வரும். உயிர்ப்பு — சுவாசம். முடுகு வாதம் — விரைந்து வரும் காற்று. புறத்திடை — வெளிப்புறத்தில். நிறுவி — நிறுத்தி. வன்மையால் — வலிமையாக. நாசியின் அளவையின் — மூக்கு வரையில். நடத்த — இழுத்து நடத்த. கண்டவன் — அந்த அபாயத்தைக் கண்டு கொண்ட அனுமன். விதிர்த்த — நடுங்கிய.]

மகாவீரனாகிய அனுமனுக்குக் கூடக் கைகள் நடுங்குகின்றனவாம். அதி சாமர்த்தியமாக விலகி அப்பால் குதித்து விடுகிறான். இப்படித் தப்பிய அனுமன் 'ராம ராமா! தலை பிழைத்தது தம்பிரான் புண்ணியம்' என்று ஓடிப்போகும் பக்தமணி அல்லன் !

பெருங்கோபத்துடன் அந்த 'உறங்குகின்ற மலை'யை நோக்குகிறான். 'அரக்கர்கோனாகிய ராவணன் தானோ இவன்?' என்று ஒரு கணம் சந்தேகிக்கிறான். கும்பகர்ணனுடைய அந்தப் பிரம்மாண்டமான ஒரு தலையே பத்துத் தலைகள் போல் தோன்றி அனுமனையும் சற்று மயக்கி விடுகிறது.

மீண்டும் மூச்சுப் புயலில் சிக்கிக் கொள்ளாமல் ஜாக்கிரதையாக அருகில் சென்று பார்த்து, 'பத்துத் தலைகள் இல்லை, கைகள் இருபதும் இல்லை' என்று கண்டு பிடிக்கிறான். அதனால் கோபத் தீயை அவித்துக் கொள்கிறான்.



அவித்து நின்று, அந்த 'உறங்கும் மலை'யுடன் ஏதோ உரையாடுவது போலத் தனக்குள் தானே சொல்லிக் கொள்கிறான். அப்பால் என்ன செய்கிறான்? எல்லாம் இந்த ஜாலக் கண்ணாடியில் பார்த்துக் கொள்ள வேண்டியது தான் :

> அவித்து நின்(று), 'எவன்
> ஆயினும் ஆக!'என்(று)
> அங்கை
>
> கவித்து, 'நீங்கிடச்
> சிலபகல்!' என்பது
> கருதாச்,
>
> செவிக்குத் தேனென
> இராகவன் புகழினைத்
> திருத்தும்
>
> கவிக்கு நாயகன்
> அனையவன் உறையுளைக்
> கடந்தான்.

[அங்கை கவித்து—அழகிய கையை அபயங் கொடுப்பது போல் (கேலியாகவும் உபேட்சையாகவும்) காட்டிக் கொண்டே. சில பகல்—சில தினங்கள். கருதா—கருதி. கவிக்கு நாயகன்—வானரர்களின் தலைவனாகிய அனுமன். அனையவன் உறையுளை—அந்தக் கும்பகர்ணனது இருப்பிடத்தை.]

'அட ராட்சஸா, நீ யாராயிருந்தாலும் சரி, சில தினங்களில் கிழிபட்டுப் போகுமே உன் ஜாதகக் குறிப்பு!' என்று உதாசினமாகச் சொல்லி விட்டு அப்பால் போகிறான் அனுமன்.

'செவிக்குத் தேனென இராகவன் புகழினைத் திருத்தும் கவிக்கு நாயகன்' என்று எவ்வளவு அருமையாகப் பாராட்டப் பெறுகின்றான்!

வேறு வைபவங்கள்

அறிவினால் தன் கோபத்தை அடக்கி நின்ற போதிலும், தான் அவசரமாய்ச் சென்று கொண்டிருந்த காரியத்தைச் சற்றுத் தடைப்படுத்தி விட்டதால் ஏற்பட்ட கோபம் இன்னும் முற்றும் தீர்ந்தபாடில்லை. ராவண சகோதரனாகிய கும்பகர்ணனைக் கண்ட கோபமும் அதனால் ஏற்பட்ட பகைமை யுணர்ச்சியும் முற்றும் நீங்காத நிலையில், அனுமன் மற்றும் பல இடங்களில் தேடிப் போகிறான்என்று கருதுவது தவறாகாது.


கும்பகர்ணன் உறங்கிக் கொண்டிருந்த மண்டபத்தை விட்டுப் புறப்பட்டதும் அனுமன், இன்னும் எத்தனையோ கூடங்கள், மாளிகை வரிசைகள், நர்த்தன சாலைகள் முதலான இடங்களிலெல்லாம் சீதையைத் தேடிப் பார்க்கிறான். அரக்கர்கள் ஜாதிக் கூட்டம் போடும் அம்பலங்களிலும் தேடுகிறான்.

பிறரை ஹிம்ஸிக்கும் அவர்களும், காரிய சித்திக்காகத் தேவாலயங்களில் பிரார்த்தனை செய்து கொள்கிறார்களாம். அரக்கர்களிலும் ஆஸ்திக புத்தி, வைதிக புத்தி, நாஸ்திக புத்தி முதலான பல ரகங்களும் காணப்படுகின்றன. கலை வளர்ச்சிக் கழகங்களும் அரக்கர்களின் ஆதரவில் நடைபெறுகின்றன என்று சொல்லலாம். இத்தகைய தேவாலயங்கள், சங்கீத மஹல்கள், சரஸ்வதி மஹல்கள் (பட்டி மண்டபங்கள்) முதலான இடங்களிலும் தேடிக் கொண்டே போகிறான். இன்னும் அனுமனுடைய கோபமும் பகைமை யுணர்ச்சியும் முற்றும் நீங்கி விடவில்லையாம்.

இவன் சென்று கொண்டிருக்கும் வழியிலே கற்பகத் தருக்கள் அடர்ந்து பந்தலாய்க் காணப்படுகின்றன. அங்கே ஓரிடத்தில் பளிங்குக் கற்களால் அமைந்த மேடைகளோடு கூடிய பவளமயமான ஒரு மாளிகை காணப்படுகிறது.

அந்த இடத்திற்கு வந்ததும், கும்பகர்ணனைப் பார்த்ததால் ஏற்பட்டிருந்த பகைமை யுணர்ச்சி முற்றும் அவிந்து போகிறதாம். ஏனென்றால் இங்கே தான் தர்மம் ஒளிந்து வாழ்ந்து கொண்டிருக்கிறதாம்.

உறங்கும் மலை கண்டு பொங்கிய பகைமை, ஒளிக்கும் தருமத்திற்குப் பணிந்து ஒடுகிறது.



பி.ஸ்ரீ

408. விபீஷணன் கோயிலில்

இலங்கை மாதேவியின் வீழ்ச்சியை ஒரு புதிய சிருஷ்டியாகக் காட்டிய கம்பன், அனுமனது நகர சஞ்சாரத்தையும் ஒரு புதிய முறையில் நடத்திக் கொண்டு போகிறான். இதை நன்றாகத் தெரிந்து கொள்வதற்கு, வால்மீகியின் கதைப் போக்கையும் பார்த்துக் கொள்வது அவசியமாகும்.

ஆதிகாவியப் போக்கு

லங்காதேவதையை வென்ற பின் அனுமன் இலங்கையில் புகுந்து, முத்துக்களாலும் பூக்களாலும் அலங்கரிக்கப் பெற்றிருந்த ராஜவீதியை அடைந்து, நகரெங்கும் சுற்றித் திரிந்தான். ராட்சஸ ஜனங்களின் மகிழ்ச்சி — ஆரவாரங்களும் வாத்திய கோஷங்களும் நிறைந்திருந்தன. வீடுகள், இரத்தினங்கள் இழைத்த ஜன்னல்களுடனும் சித்திர வேலைகளுடனும் பிரகாசித்தன. பிரபுக்களின் மாளிகைகளில் கால் — சலங்கைகளும் மேகலாபரணங்களும் இனிமையாக ஒலித்தன. வீரர்கள் தோள் தட்டிச் சிங்கநாதம் செய்து கொண்டிருந்தனர். சில அரக்கர்கள் வேத அத்யயனம் செய்து கொண்டிருந்தனர். (அதே வாயால்) ராவண ஸ்தோத்திரங்களும் செய்து கொண்டிருந்தார்கள். ராட்சஸப் படை வீரர்கள் ராஜமார்க்கத்தைச் சுற்றித் தங்கியிருந்தனர்; இடையே ஒற்றர்களும் சஞ்சரித்தனர், விகார பயங்கர உருவினர்களும் காணப்பட்டனர்.

தோரணத்தோடு கூடிய ராவணனுடைய அரண்மனை மலையுச்சியில் கட்டப் பெற்றிருந்தது. மதில்களாலும் அகழிகளாலும் சூழப்பட்டிருந்தது. அங்கிருந்து ஆபரண சப்தங்கள் முதலான திவ்ய ஓசைகள் கிளம்பின. கோர ராட்சஸர்கள் வாசல்களில் ஜாக்கிரதையாய்ப் 'பாரா' கொடுத்துக் கொண்டிருந்தனர். அனுமன் அச்சமின்றி நுழைந்தான். உன்னதமான பொற்சுவர்கள் சூழ்ந்து அகில் சந்தனம் முதலிய பரிமளங்கள் கமழ்ந்த அந்தப்புரத்திலும் அனுமன் பிரவேசித்தான்.

பிறகு சந்திரோதய வருணனை கதைப் போக்கைச் சற்றுத் தடைப்படுத்திய போதிலும், ஓர் அழகான இயற்கை வருணனைதான். சொர்க்கத்தைப் போல் சகல விதமான ஆனந்தத்திற்கும் காரணமான காலமாய் அரக்கர்களுக்கு வாய்த்து விட்டதாம் சந்திரிகை.

வீணை முதலிய வாத்தியங்களின் நாதம் மதுரமாய்க் கேட்கவே, அரக்கர்கள் ஆச்சரியமான குரூர சுபாவத்துடன் விளையாடத் தொடங்கினர். மதுபான வெறியும் கலந்து காணப்பட்டது. பிதற்றல்களும் அதட்டல்களும் வீர வாதங்களுமாய்ப் பலவேறு லீலைகளும் நடைபெற்றன. மகா சர்ப்பங்கள் சீறிக் கொண்டிருக்கும் பெரிய மடுவைப் போலிருந்தது லங்காபுரி. அரக்கர்களில், அறிவில் சிறந்தவர்களையும், பிரியமாய்ப் பேசுகிறவர்களையும், சிரத்தையுள்ளவர்களையும், விசேஷ கீர்த்தியுள்ளவர்களையும் அனுமன் கண்ணுற்றான். தங்கக் கொடிகள் போலவும், உருக்கி ஓடவிட்ட தங்கம் போலவும், கணவரைப் பிரிந்து வெளுத்த சந்திரனைப் போலவும் காணப்பட்ட பெண்களைக் கண்டான். முழுமதி போன்ற முக வரிசைகளையும், மின்னற்கொடி போன்ற ஆபரணங்களையும் உற்றுப் பார்த்தான். சீதையை மாத்திரம் காணவில்லை. புத்தி மயங்கியவனைப் போல் பெருங் கவலை கொண்டான். சற்று நேரம் ஒன்றும் தோன்றாமல் உட்கார்ந்திருந்து விட்டு மறுபடியும் ஜாக்கிரதையாகத் தேடித் திரிந்தான்.

மறுபடியும் ராவணனுடைய அரண்மனைக்கு வந்து சேர்ந்ததாக வால்மீகி சொல்லுகிறார். இதற்கு ஓர் உரையாசிரியர் ஒரு சமாதானமும் சொல்லுகிறார். முதலில் ஒரு தடவை அரண்மனைக்குள் பிரவேசித்தபோது அரக்கர்கள் ஜாக்கிரதையாய் விழித்துக் கொண்டிருந்தது தெரிந்து, மறுபடியும் நகரத்தில் தேடி விட்டு அனுமன் கொஞ்ச நேரத்தில் திரும்பி வந்தானாம். அந்த அரண்மனையைத் தங்கள் பிரபுவின் கிரகமென்று ராட்சஸர்கள் பூஜித்து வந்தார்கள். அனுமன் ஆச்சரியத்துடன் அதை இலங்கைக்குப் பூஷணமென்றே கருதினான். வெளிப் பிராகாரத்திற்குள்ளே பிரதான ராட்சஸர்களும், ராவண புத்திரர்களும் சகோதரர்களும் வசிக்கும் வீடுகளில் தேடிப் பார்த்தான். பிரஹஸ்தனுடைய வீட்டில் பாய்ந்தான். மஹாபார்சுவனுடைய மாளிகையில் தாவினான்.

பிறகு மேகத்தை ஒத்த கும்பகர்ணனுடைய மாளிகையிலும், அப்படியே விபீஷணனுடைய மாளிகையிலும் தாவினான் வானரப் பெரியோன் என்கிறார் வால்மீகி. அப்பால் மகோதரன் முதலானவர்களுடைய மாளிகைகளையும் தாவிச் சென்றான். இப்படி விவரமாய் வெளியிட்டு வரும் ஒரு பெரிய பெயர்வழி ஜாப்தாவுக் கிடையே, 'புத்திமானான இந்திரஜித்தின் மாளிகையிலும் அவ்வாறே சென்றான்' என்கிறார் வால்மீகி.

விபீஷண மாளிகையிலே

இனி, கம்பனுடைய கதையமைப்பே ஒரு புத்தப் புதிய சிருஷ்டி என்பது தெளிவுதானே? பல இடங்களிலும் சென்று சீதையைத் தேடிக் கண்டு பிடிப்பதற்காக இலங்கை மாதர்களை யெல்லாம் பார்த்து வருகின்ற அனுமன் விபீஷணனுடைய மாளிகைக்குள் புகுந்தான் என்பதைக் கூறும் இந்தச் செய்யுளைத்தான் பாருங்கள் :

ஏந்தல், இவ்வகை
எவ்வழி மருங்கினும்
எய்திக்
காந்தள் மெல்விரல்
மடந்தையர் யாரையும்
காண்பான்,
வேந்தர், வேதியர்,
மேலுளோர், கீழுளோர்
விரும்பப்
போந்த புண்ணியன்
கண்ணகல் கோயிலுள்
புக்கான்.

[ஏந்தல் — பெரியோனாகிய அனுமன். இவ்வகை — இவ்வாறு. எவ்வழி மருங்கினும் எய்தி — எவ்வகைப்பட்ட இடங்களையும் அடைந்து. காந்தள் மெல்விரல் — செங்காந்தள் மலரின் இதழ் போன்ற மென்மையான கைவிரல்களையுடைய. மடந்தையர் யாரையும் — மகளிர் அனைவரையும். காண்பான் — கண்டு வருபவன். விரும்ப - தன்னை

விரும்பும்படி. போந்த - தோன்றிய. கண்ணகல் கோயிலுள் - விஸ்தாரமான மாளிகைக்குள்ளே. புக்கான் - சென்றான்.]

விபீஷணனை 'வேந்தர், வேதியர், மேலுளோர், கீழுளோர் விரும்பப் போந்த புண்ணியன்' என்று எவ்வளவு கண்ணியமாகவும் பக்தியாகவும் குறிப்பிடுகிறான் கம்பன்! எவருக்கும் எத் தீங்கும் செய்யாத அஹிம்ஸா தர்ம மூர்த்தியாகி எல்லாருக்கும் நண்பனாகி நன்மையே புரிகின்ற மகாத்மா என்று முதல் முதல் விபீஷணனை அறிமுகப் படுத்துகிறான். விபீஷண குணாதிசயத்தின் விசேஷ அம்சம் இது.

இந்தப் புண்ணிய மூர்த்தியின் மாளிகையும் இவனுடைய இதயம் போல் விசாலமாயிருக்கிறது என்பது குறிப்பு. ஒரு விசாலமான மாளிகையில் குறுகிய உள்ளத்தைக் காண்பதைக் காட்டிலும் ஒரு குடிசையில் விசால உள்ளத்தைக் காண்பது விசேஷமானது என்றார் ஒரு கிரேக்க ஞானி. அனுமனோ எவ்வளவு விசாலமான அழகிய உள்ளத்தைக் காண்கிறான் இம்மாளிகையில்!

பளிக்கு வேதிகைப்
  பவளத்தின் கூடத்தில்,
    பசுந்தேன்
துளிக்கும் கற்பகப்
  பந்தரில், கருநிறத்
    தோரை
வெளித்து வைகுவ(து)
  அரியெனா அவர்உரு
    மேவி
ஒளித்து வாழ்கின்ற
  தருமம் அன்னான்தனை
    உற்றான்.

[பளிக்கு வேதிகை — பளிங்கு வேதிகை; ஸ்படிகக் கற்களினாலாகிய மேடைகள். பவளத்தின் கூடத்தில்— பவள மயமான அந்த மாளிகையில். வெளித்து —(வெளிப்படையாய்) வெண்ணிற வடிவங் கொண்டு. வைகுவது — தங்குவது. அரியெனா — கூடாதென்று கருதி. அன்னான் — போன்றவன். உற்றான் - சமீபித்தான்.]

கற்பகச் சோலை சூழ்ந்த பவளமாளிகையில் பளிங்கு மேடைமீது கற்பகப் பூம்பந்தலின் கீழே விபீஷணன் படுத்திருக்கிறான். ஸாக்ஷாத் தர்மதேவதையே



அப்படிப் பள்ளி கொண்டிருக்கிறது என்று சொல்லத் தோன்றுகிறது கவி ஞனுக்கு.

ஆனல் தர்மம் தூய்மைக்கு அறிகுறி யான வெண்ணிறம் வாய்ந்ததென்று புரா ணம் சொல்லுகிறதே, — இவன் தோல் கறுப்பல்லவா? அதற்கும் சமாதானம் சொல்லுகிறது கவியுள்ளம். கரு நிற முள்ள அரக்கர்களுக்கிடையே தர்மம் வெண்ணிறத்துடன் வாழ முடியுமா? அதனல் தான் அவர்களுக்குரிய கரு நிற உருவத்தைத் தானும் தரித்துக்கொண்டு ஒளித்து வாழ்கிறதாம் தர்மம், விபீஷண ரூபத்திலே.

இப்போது, முந்திய பாட்டின் பகுதி யான 'புண்ணியன்......கோயிலுள் புக் கான்' என்பதைப் படித்துப் பாருங்கள். ஏதோ ஒரு மாளிகைக்குள் அனுமன் பிர வேசித்தான் என்ற உணர்ச்சியா ஏற்படு கிறது? புண்ணிய மூர்த்தியின், தர்ம தேவதையின், கோயிலுக்குள்ளே அனு மன் பிரவேசிக்கிறன் என்ற உணர்ச்சி யல்லவா ஏற்படுகிறது? (இராஜ்ய லட் சுமி ராவணனுடைய அரண்மனையி லிருந்து விபீஷணனுடைய அரண்மனை க்குச் சென்றதாய்த் திரிஜடை தன் கனவைச் சொல்லும் போதும் 'வீட ணன் கோயில்' என்கிறள்.)

அனுமன் புண்ணியம்

இதே பக்தியுணர்ச்சி அனுமனுக்கும் ஏற்பட்டதென்று எவ்வளவு துணிவா கத் தெளிவாகக் காட்டுகிறன் கம்பன்:

உற்று நின்(று), அவன்
 உணர்வைத்தன் உணர்வினல்
 உணர்ந்தான்,
'குற்றம் இல்லதோர்
 குணத்தினன் இவன்'எனக்
 கொண்டான்,
செற்றம் நீங்கிய
 மனத்தினன், ஒருசிறை
 சென்றுன்,
பொற்றை மாடங்கள்
 கோடிஓர் நொடியிடைப்
 புக்கான்.

[செற்றம்-(கும்பகர்ணனைக் கண்டதும் பொங்கி இன்னும் முற்றும் நீங்காம லிருக்கும்) பகைமையுணர்ச்சி. நீங்கிய - (விபீஷணனைக் கண்டதும்) நீங்கப் பெற்ற. மனத்தினன் - மனத்தை யுடைய வனுகி. ஒரு சிறை சென்றுன் - (அம்மா ளிகையைக் கடந்து) வேருெரு பக்க மாய்ப் போய். பொற்றை மாடங்கள் கோடி - குட்டி மலைகள் போன்ற எண் ணிறந்த மாட மாளிகைகளுக்குள். ஓர் நொடியிடைப் புக்கான் - ஒரு நொடிப் பொழுதிலே போய்த் தேடி விட் டான்.]

விபீஷணன் உறங்கிக் கொண்டிருக் கிறன். அனுமன் நெருங்கி நின்று, 'உணர்வைத் தன் உணர்வினல் உணர்ந் தான்'. அபூர்வ உயர்வு வாய்ந்த கருத்து, அபூர்வ எளிமை வாய்ந்த தமிழிலே.

இதனல் அனுமன் பெறும் பேறு தான் கொஞ்சமோ?

செற்றம் நீங்கிய
 மனத்தினன்

ஆகிவிடுகிறனல்லவா? 'திருமுருகாற் றுப் படை'யில் 'செற்றம் நீக்கிய மனத் தினர்' என்று முனிவர்களை யல்லவா குறிப்பிடுகிறர் ஆசிரியர்?

* * *

விபீஷணனது மாளிகையைத்தான் அனுமன் எவ்வளவு நன்றாகக் கவனித் துப் பார்த்திருக்க வேண்டும்!

நிந்தனை நறவமும்
 நெறியில் ஊன்களும்
தந்தன கண்டிலேன்,
 தரும தானமும்
வந்தனை நீதியும்
 பிறவும் மாண்பமைந்(து)
அந்தணர் இல்லெனப்
 பொலிந்த தாமரோ!

[நறவமும்—மது வகைகளும். நெறி யில் ஊன்களும் — சன்மார்க்கத்திற்கு இசையாத மாமிச வகைகளும். இல் என —இல்லம் போல.]

என்று வருணிக்கப் போகிறனல்லவா?



பி.ஸ்ரீ

409. சிங்கமும் செந்தாமரையும்

பல மாட மாளிகைகளிலும் விரைந்து புகுந்து தேடிப் பார்த்த பிறகு வேறொரு மாளிகை அனுமனது கவனத்திற்கு இலக்காகிறது. மகா பலசாலிகளும் ஆயுதபாணிகளுமான காவலாளர்கள் அதி ஜாக்கிரதையாகக் காவல் செய்து கொண்டிருக்கிறார்கள் அந்த வாசலில்.

கண்டான், கடந்தான்

ஏன் இவ்வளவு ஜாக்கிரதை, இந்தப் பெரிய பாதுகாவல்? அனுமனும் இந்த கைய வினாக் குறி முகத்திலே தோன்ற இந்த மாளிகையின் வாசலை நோக்குகிறான்.

இந்தி ரன்சிறை
  இருந்தவா –
    யிலின்கடை
  எதிர்ந்தான்.

[வாயிலின் கடை – கடைவாயில்; தலை வாசல். எதிர்ந்தான் –நோக்கினான்.]

ராவணனுடைய திக்விஜய காலத்திலே தேவேந்திரனை இந்திரஜித் மாயப் பாசத்தால் கட்டிக் கொண்டு வந்து, தன் வீட்டு வாசலையே தேவ ராஜாவுக்குச் சிறைச்சாலையாக்கி வைத்திருந்தானாம். அந்த வாசலைத்தான் இப்போது அனுமன் எதிர்நோக்குகிறான்.

காவலைக் கண்டான், கடந்தான். எப்பேர்ப்பட்ட காவல், பார்த்துக் கொள்ளுங்கள் :

எதி ஏந்திய
  தடக்கையர், பிறைஎயி(று)
    இலங்க
மூது ரைப்பெருங்
  கதைகளும் பிதிர்களும்
    மொழிவார்,
ஓதில் ஆயிரம்
  ஆயிரம் உறு
    வலி
  அரக்கர்
காது வெஞ்சினக்
  களியினர்
    காவலைக்
  கடந்தான்.



[எதி – ஆயுதங்கள். தடக்கை – பெரிய கை. பிறை எயிறு – பிறைச் சந்திரன் போன்ற கோரப் பற்கள்.

மூதுரை — பழமொழிகளோடு கூடிய. ஓதில் — அளவு சொல்லும்போது. உறு வலி — மிக்க வலிமை வாய்ந்த. காது — (எதிரிகளை) அழிக்கவல்ல. களி — (இங்கே) போர் வெறி.]

பழைய திக்விஜய காலத்துக் கதைகளைச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள் சிலர், உறக்கம் வராமலிருப்பதற்காக. வேறு சிலர் விநோதமாய்ப் புதிர் போட்டுப் பொழுது போக்குகிறார்கள்.

அந்தப் பழைய யுத்த சமாசாரங்களைப் பேசும்போதும் நினைக்கும் போதும், அவர்களுக்குத்தான் என்ன போர்வெறி, என்ன கோபாவேசம்! இந்தக் கட்டுக் காவலையும் கடந்து அனுமன் இந்த மாளிகைக்குள் பிரவேசிக்கிறான்.

இந்திரஜித்தின் ரூப சம்பத்து

மலைக்குள்ளே கவலை யில்லாமல் உறங்கும் ராஜ சிங்கம் போல் உறங்கிக் கொண்டிருப்பவனின் உருவத் தோற்றத்தைக் கண்டு அனுமன் திகைத்து நிற்கிறான் :

'வளையும் வாள்எயிற் —
 றரக்கனோ? கணிச்சியான்
 மகனோ?
அளையில் வாளரி
 அனையவன் யாவனோ ?—
 அறியேன் ;
இளைய வீரனும்
 ஏந்தலும், இருவரும்
 பலநாள்
உளைய உள்ளபோர்
 இவனொடும் உள(து)!' என
 உணர்ந்தான்.

[வளையும் வாள் எயிற்றரக்கனோ—வளைந்திருக்கிற, பிரகாசமுள்ள, கோரப் பற்களையுடைய ராவணன் தானோ. கணிச்சியான் மகனோ—சிவ குமாரனாகிய முருகன் தானோ. அளையில்—மலைக்குகையில். வாள்அரி அனையவன்—கொடிய சிங்கம் போன்ற இவன். இளைய வீரனும்—லட்சுமணனும். ஏந்தலும்—தலைவனாகிய ராமனும். உளைய—மன உளைச்சல் ஏற்படும்படி.]

கும்பகர்ணனது பிரம்மாண்டமான ஒரு தலையே ராவணனது பத்துத்தலை போலத் தோன்றியதல்லவா அனுமனுக்கு? இப்போது இந்திரஜித்தின் முகவிலாசம், 'இவன் தான் ராவணனோ?' என்று மயங்கச் செய்கிறதாம்.

'ஸாக்ஷாத் முருகக் கடவுளோ?' என்று கூட ஆச்சரியப்படுகிறான். பிறகு 'லட்சுமணன் சிரமப்படுவானே!' என்று சொல்லி விட்டு, அப்பால் ராமனும் சிரமப்படுவானே!' என்கிறான்.

கடைசியாக, 'இருவரும் பலநாள் இவனோடு ஏற்படும் போரில் மன உளைச்சலுக்கு உட்படுவார்களே!' என்று கவலைப்படுகிறான்.

அனுமனுடைய ஆழ்ந்தகன்ற நுண்ணறிவு இந்திரஜித்தின் வீர சரித்திரத்தை எவ்வளவு தெளிவாக அந்த முகத்திலே வாசித்துவிடுகிறது! இந்திரஜித்தின் வீர லட்சணம் தான் எப்படி யிருந்திருக்க வேண்டும், மகாவீரனும் பேரறிவாளனுமான அனுமனையும் பிரமிக்கச் செய்வதற்கு!

இந்திரஜித்தின் அதிவீர வாலாற்றிலே எதிர் காலத்தையும் அல்லவா ஒருவாறு எதிர்நோக்கி ஊகித்துக் கொள்கிறது அனுமனது மதிநுட்பம்?

ஆம்; இந்திரஜித் ராமலட்சுமணர்களைத் தன் போர்த்திறனாலும் தந்திரங்களாலும் எவ்வளவு கவலைக்கு உட்படுத்தப் போகிறான்! ஏன், இந்த அனுமனைத்தான் லேசாக விட்டு வைக்கப் போகிறானா?

அந்த வீரப் பெரு நிகழ்ச்சிகளுக்கெல்லாம் அனுமனுடைய இந்த மூல சிந்தனை இதிகாசப் போக்கிற்கு இசைவாக ஒரு ரஸமான பீடிகை போடுகிறது, — இல்லையா?

இந்திரஜித்தைப் பார்த்தபின் ராவணனுடைய திக்விஜயம், திரிலோக விஜயம் ஆகிய வெற்றி யெல்லாம் ஆச்சரியமாகவே தோன்ற வில்லையாம் அனுமனுக்கு:

இவனே இன்துணை—
யுடையபோர் இராவணன்,
என்னே,

புவனம் மூன்றையும்
வென்ற(து)ஓர் பொருள்எனப்
புகறல் !

[இன் துணையுடைய—இனிய போர்த் துணையாக வுடைய. புவனம் மூன்றையும் — மூன்று உலகங்களையும். புகறல் — புகலுதல், சொல்லுதல்.]

இப்படித் தனக்குத் தானே சொல்லிக் கொள்ளும் அனுமனுடைய அந்த உருவ நிலையையும் கண் முன்னே கொண்டு காட்டுகிறது கவிதை. இப்பேர்ப்பட்ட போர்த் துணை கொண்டவன் திரிலோக ஆதிபத்தியம் பெற்றதில் என்ன ஆச்சரியம் இருக்கிறது என்று ஆச்சரியப்படுகிற அனுமன், கையை மடக்கித் தாடையில் வைத்துக் கொண்டு அப்படியே பிரமித்து நின்று விடுகிறானும் கொஞ்ச நேரம்.


கடைசியாக, 'இனி இங்கு வீணே பொழுது போக்குவது சரியில்லை' என்று இந்திர ஜித்தின் மாளிகையை விட்டுப் போகிறான் :

என்று கைம்மறித்(து),
'இடைநின்று காலத்தை
இகப்ப(து)

அன்று; போவ(து)என்(று),
ஆயிரம் ஆயிரத்(து)
அடங்காத்

துன்று மாளிகை
ஒளிகள் துரிசறத்—
துருவிச்

சென்று தேடினன்,
இந்திர சித்தினைத்
தீர்ந்தான்.



[கைம்மறித்து — கையை மடக்கி அதிசய உணர்ச்சியுடன் தாடையில் வைத்துக்கொண்டு. இடைநின்று — இவ்விடத்திலே நின்று. காலத்தை இகப்பது — காலத்தை வீணுய்க் கழிப்பது. அன்று — சரியன்று. போவது என்று — போவதே சரியென்று. ஆயிரம் ஆயிரத்து அடங்கா — பத்து லட்சம் என்ற அளவிலும் அடங்காத. துன்று மாளிகை — நெருங்கிய மாளிகைகளின். ஒளிகள் — வரிசைகள். திரிசறத் துருவி — குற்றமில்லாதபடி தேடிக் கொண்டு. இந்திரசித்தினைத் தீர்ந்தான் — இந்திரஜித்தை விட்டு அப்பால் போனவனும்.]

அகழியிலே ஒரு சிந்தனை — அலை

அட்ச குமாரன், அதிகாயன் முதலான அரசிளங்குமார்கள், வேறு வீரர்கள் ஆகியோர் வீடுகளிலும், மந்திரிமார் முதலான அறிஞர்களுடைய மனைகளிலும் தாவிப் புகுந்து தேடிவிட்டு, ராவணனது அரண்மனையைச் சூழ்ந்திருக்கும் அகழியை அடைகிருன்.

பளிங்கு போலத் தெளிந்திருக்கும் அகழி நீருக்கும், கரையில் பளிங்குக் கல் பதித்த இடத்திற்கும் அந்தச் சந்திரிகையில் வேற்றுமை தெரியவில்லை. அனுமனும் மயங்குகிருன்.

அகழியில் வாழும் நாரை, குருகு, உள்ளான் முதலிய பலவகை நீர்ப் பறவைகளும் கலகலவென்று சிலம்பிக் கொண்டிருக்கின்றன,—செருக்கிக் களித்திருக்கும் அரக்கரைப் போல.

மங்கிவரும் மாலை வெளிச்சத்திலும் அனுமன் இலங்கையை ஓர் அதிசயமான போக பூமியாகக் கண்டான். பொங்கி வரும் சந்திரிகையிலும் அப்படியே காண்கிருன்.

இயற்கையும் களிப்பில் மூழ்கி விளையாடுகிறது, வெறியாட்ட மாடுகிறது. இயற்கைக்கும் இலங்கை அரக்கர்களுக்கும் எவ்வளவு பொருத்தம், என்ன உறவு!

சிறை புகுந்த சீதா தேவியிடம், இயற்கையே! உனக்கும் இரக்கம் இல்லையா?

அந்த அகழியின் துறைகளில் இயல்பாக மூடிக்குவிந்திருக்கும் செந்தாமரைப் பூக்களைப் பார்க்கும்போது கொஞ்சம் ஆறுதல் ஏற்படுகிறது :

நறவு நாறிய
 நாள்நறுந் தாமரை,
துறைகள் தோறும்
 முகிழ்த்தன தோன்றுமால்;
சிறையின் எய்திய
 செல்வி முகத்தினே(டு)
உறவு தாம்உடை—
 யார்ஒடுங் கார்களோ?

[நறவு நாறிய — தேனோடு நறுமணம் கமழ்கிற. நாள் நறுந்தாமரை — அன்று மலர்ந்த நல்ல தாமரைப் பூக்கள். முகிழ்த்தன — மூடிக் குவிந்தனவாம்.]

'இலங்கை முழுதும் கவலையின்றிப் போகத்தில் மூழ்கிக்கிடக்கிறது. இந்தச் செந்தாமரைப் பூக்கள் மாத்திரம் மலர்ச்சி குன்றி ஒடுங்கியிருக்கின்றன. சிறைவாசம் செய்யும் சீதாபிராட்டியின் முகத்திற்கு உறவினமாதலால், அந்தத் திருமுகம்போல் இந்த மலர்களும் ஒடுங்கியிருக்கின்றன' என்று எண்ணத் தோன்றுகிறது.

இப்படி எண்ணும் போதுதான்,
 களிக்கின் ருரலால்
 கவல்கின்ருர் ஒருவரைக்
 காணேன்!

எனக் கலங்கிய உள்ளம் கொஞ்சம் தெளிவடைகிறது.

வாழ்க்கையைக் களியாட்டமாக்கிக் கொண்ட போக பூமியின் கோலாகலங்களுக்கிடையே, சிறைபுகுந்த செல்வியை எவ்வளவு சாதுரியமாக நினைப்பூட்டுகிருன் கவிஞன்!

* * * *

ஒடுங்கிய செந்தாமரை மீண்டு மலர்ச்சி பெற வேண்டும். ஆனல் குகைக்குள்ளே புகுந்த சிங்கத்தை வெல்ல வேண்டுமல்லவா?



410. நட்ட நடு நிசியில் (சில காதல் - சித்திரங்கள்)

பித்தரும் உறங்கும் நேரம்

அனுமன் இலங்கையின் புற நகரில் தேடி விட்டு நடு நகரில் பிரவேசிக்கும் போது நடு நிசியாகி விட்டது.

கடல் போல் கோஷித்துக் கொண்டிருந்த ஆர்ப்பாட்டங்கள் எல்லாம் அடங்கி விடுகின்றன. சஞ்சாரங்கள் ஓய்ந்து அரக்கர்களும் உறங்கிப் போகிறார்கள்.

இந்த நடுநிசியின் வருணனையைப் பாருங்கள் :

நித்தநிய மத்தொழில —
ராய்நிறையும் ஞானத்(து)
உத்தமர் உறங்கினர்கள் ;
யோகியர் துயின்றார் ;
மத்தமத வெங்களி(று)
உறங்கின : உறங்காப்
பித்தரும் உறங்கினர் ;
இனிப்பிறர் இதென்னும் ?

[நித்தம் நியமத் தொழிலராய் — நாள் தோறும் முறை தவறாமல் செய்யும் தொழில்களை உடையவர்களாய். மத்தம் — மயக்கம். மத வெங்களிறு — கொடிய மதம் பிடித்த யானைகள். என்னும் — என்ன ஆகும்.]

இந்த நடுநிசியில் உறங்காதவர் யார்? அனுமன் ஒருவன் உறங்காமல் தேடிக் கொண்டிருக்கிறான் என்பது தெரியும். இன்னும் யார் உறங்காதவர் என்று பார்க்கலாம்.

உறங்காத தனிமை

இந்த நள்ளிரவிலே, இந்த ராட்சஸ ராஜதானியிலே, காலனும் வரத் துணிவானா? வர நேர்ந்தால் வந்த காரியம் பாராமலே நடுங்கி ஒரே ஓட்டமாய் ஓடிப் போய் விடுவானாம். அனுமனோ தன்னந் தனியனாக இந்த ஊரிலே, இந்த வேளையிலே தேடித் திரிகிறான்.

இரவும் மையிருட்டும் தனிமையும் தானுமாய்த் திரிகிறானாம் :

கரிய நாழிகைப்
பாதியில் காலனும்
வெருவி ஓடும்
அரக்கர்தம் வெம்பதி,
ஒருவனே,ஒரு
பன்னிரு யோசனைத்
தெருவு மும்மைநா —
றாயிரம் தேடினான்.

[கரிய நாழிகைப் பாதியில் — நடுராத் திரிப் பொழுதில். வெருவி — அஞ்சி.

வெம்பதி — கொடிய நகர். தெருவு மும்மை நூறாயிரம் — மூன்று லட்சம் தெருக்களில்.]

புற நகர், நடு நகர், அக நகர் என்று இலங்கைமா நகரம் மூன்று வட்டங்களாய் அமைந்திருக்கிறது. நகரத்தின் ஹிருதய ஸ்தானமா யிருப்பது அக நகரில் ராவணனுடைய அரண்மனை.

அதை அடுத்துச் சூழ்ந்துள்ள பல மாளிகைகளும் பூர்ண சந்திரனைச் சுற்றி யிலிரும் நட்சத்திரக் கூட்டம் போல் அமைந்திருக்கின்றன.

ராவணன் பல ஜாதிகளிலிருந்தும் மணஞ் செய்து கொண்டிருந்த மனைவியர் இல்லங்கள் இவை. இவர்களில் யட்ச ஸ்திரீகள், வித்த ஜாதி மாதர்கள், வித்யாதர குலப் பெண்கள் உண்டு; ராட்சஸ குல சுந்தரிகளும் உண்டு.

ராவணனுடைய மனைவியர் பலரும் இவனை உண்மையாகவே காதலிக்கிறார்கள். ஆனால் சீதையிடம் மோகம் ஏற்பட்ட காலம் முதல் அவன் வேறு ஒருத்தியையும் நினைத்துப் பார்ப்பதில்லை.

அந்நிலையில் யட்ச குல மனைவியரில் சிலர் அனுபவிக்கும் விரக வேதனைகள் வருணிக்கப்படுகின்றன.

காட்சி 1

இச் சந்தர்ப்பத்தில் சில காதற் பாடல்கள் அதிசயமான இசைச் சித்திரங்களாய் உருவாகி வருகின்றன.

முன்பு அழகில் மாத்திரம் சித்திரப் பாவைபோலிருந்தார்களாம். இப்போதோ ராவணனுடைய வீர சௌந்தரியத்தில் ஈடுபட்ட சிந்தையராய்க் கண் இமைத்தலும் இன்றி அப்படியே அசைவற்றிருக்கிறார்களாம்.

இவர்களைப் 'பெண்களின் சித்திரங்களே!' என்று பேறிவாளனான அனுமன் கூட ஒரு கணம் பிரமித்துப் போவதாகத் தோன்றுகிறது. இப் பெண்மணிகளை,

சித்தி ரங்கள்
　　என இருந் தார்சிலர்

என்று காட்டுகிறான் கவிஞன்.

காட்சி 2

வேறு சில யட்ச மங்கையர் நிலை வேறொரு அற்புத இசைச் சித்திரமாக வருகிறது:

அள்ளல் வெஞ்சர
　　மாரனை அஞ்சியோ?
மெள்ள வேகன —
　　வின்பயன் வேண்டியோ?
கள்ளம் என்கொல்?
　　அறிந்திலம்: கண்முகிழ்த்(து)
உள்ளம் இன்றி
　　உறங்குகின் றார்சிலர்.

[அள்ளல் வெஞ்சர மாரன் — அள்ளியிறைக்கும் கொடிய அம்புகளையுடைய மன்மதன். என்கொல் — யாதோ. அறிந்திலம் — அறியோம். முகிழ்த்து — மூடிக் கொண்டு.]

நட்ட நடு நிசியும் தாண்டி விட்டதால் களைத்துப்போய் உறங்குகிறார்களா? இல்லை; பொய்யுறக்கம் தான். ஓஹோ, இது என்ன கள்ளத்தனம்? உறக்கம் வாராமலிருக்கும் போதே உறங்குவார் போலக் கிடக்கிறார்களாம்.

கொடிய கொடிய அம்புகளை அள்ளி யள்ளி வீசுகிறான் மன்மதன். உறங்குவது போலிருந்தால் அறப்போர் முறைப்படி அம்பு போட்டுக் கொல்ல மாட்டான் என்ற எண்ணமா?

ஆனால் தனித்திருக்கும் பெண்களை மரண வேதனைப் படுத்தும் 'வீர'னுக்கு அறப்போரும் தெரியுமா?

இப் பெண்கள் ஒருவேளை அதிக பயத்தினால் 'ஆஸ்திரிச்சு'ப் பறவை கண்ணைப் புதைத்துக் கொள்ளும் என்கிறார்களே, அந்த மாதிரியே கண்களை மூடிக் கொண்டு விட்டார்களா?

போங்கள், அவ்வளவு பைத்தியக்காரிகளா இவர்கள்? கண் முன்னே ராவணன் வாராததால் 'கனவிலாவது வருவானா பார்க்கலாம்' என்று எண்ணியிருக்கவும் கூடும்.

ஆனால், உண்மையாகவே உறக்கம் வந்தால்தானே கனவு வரப்போகிறது?

காட்சி 3

'கள்ளம் என்கொல் - அறிந்திலம்' என்று கவிஞனே திகைத்துப் போகி



அழுது கொண்டிருப்பதால் பயனில்லை யென்று சில யட்ச ஸ்திரீகள் தங்கள் ராவணேச்வரனின் கம்பீர வடிவத்தைச் சித்திரத்திலாவது எழுதிப் பார்க்கலாமா என்று எண்ணமிடுகிறார்களாம்.

காட்சி 4

இதோ பட்சிகளோடு பேசும் சித்திரப் பதுமைகளைப் பாருங்கள்.

பாவைகள் பூவைகளுடன் குலாவுகிறார்களாம், ஒப்பற்ற இந்த இசைச் சித்திரத்திலே :

‘ஆவ தொன்(று)அரு —
ளாய்!என நாவியைக்
கூவு கின்றிலை !
கூறலை சென்றெ’னப்
பாவை பேசுவ
போல்,கண் பனிப்புறப்
பூவை யோடும்
புலம்புகின் றார்சிலர்.

[அருளாய்—அருளோடு சொல்லாமலிருக்கிறாய். ஆவி—உயிரான காதலன். கூவுகின்றிலை — (போய்) அழைக்கின்றாயில்லை. கூறலை—சொல்லவுமில்லை. என

றான். திகைத்தவன் இவர்களை இப்படியே விட்டுவிட்டு, இதே நிலையிலுள்ள வேறு சிலரைக் காட்டுகிறான்.

வேறொரு அதிசய இசைச் சித்திரத்திலே :

‘அழுது செய்வதென் ?
ஆணை அரக்கனை
எழுத லாங்கொல் ?’என்(று)
எண்ணுகின் றார்சிலர்.

[ஆணை – அதிகார தோரணைகளோடு கூடிய. அரக்கனை – (இங்கே) ராவணனை. ஆங்கொல் – ஆகுமோ.]

—என்று. பாவை—சித்திரப் பதுமை. பனிப்பு—நீர் துளித்தல். உற—மிக. பூவை—மைனா.]

தாம் வளர்க்கும் மைனாக்களுடன் கொஞ்சி உரையாடிக் கொண்டிருக்கும் இந்தப் பெண்கள் என்னதான் பேசுகிறார்களோ? உண்மையில் இவர்கள் பேசுகின்றாரில்லை, புலம்புகின்றார்; குறை சொல்லிக் குழறுகின்றார். அழாத குறையும் உண்டு.

'தோழியே! உனக்கும் இரக்கம் இல்லையா? ஆகக்கூடிய உதவி ஒன்றும் செய்யாமலிருக்கிறாயே! பிராண நாயகனைப் பிரிந்திருப்பது பிராணனையே பிரிந்திருப்பது போலத் தோன்றுகிறதே! அந்தப் பிராணனை நீ கூவியழைத்து வரலாகாதா? இந்த நிலைமையை நீ போய்ச் சொல்லவும் இல்லையே' என்று மைனாத் தோழியை நோக்கிப் புலம்பும் காதலியின் சித்திரத்தைப் பாருங்கள்.

காட்சி 5

இன்னும் ஒரு விரகதாபக் காட்சி, தென்றலையே இசையாகக் கொண்டு உருவாகிறது:

ஈரத் தென்றல்
  இழுக, மெலிந்துதம்
பாரக் கொங்கையைப்
  பார்த்தனர், பாதகன்
வீரத் தோள்களின்
  விக்கம் நினைந்(து), உயிர்
சோரச் சோரத்
  துளங்குகின் றார்சிலர்.

[ஈரத் தென்றல் — குளிர்ந்த தென்றல். இழுக—உராய்ந்து செல்ல. பாதகன்—(இங்கே) ராவணன். வீக்கம்—பருமை. துளங்குகின்றார் — தடிக்கிறார்கள்.]

காட்சி 6

விரகதாபத்திலே நடைபெறும் நாம ஸங்கீர்த்தனக் காட்சி:

கூடி. நான்குயர்
  வேலையும் கோக்கறின்(று)
ஆடி னான்புகழ்,
  அங்கை நரம்பினால்
நாடி நாற்பெரும்
  பண்ணும் நயப்புறப்
பாடி. னான்பெயர்
  பாடுகின் றார்சிலர்.

[நான்கு உயர் வேலையும்—பொங்கியெழுகின்ற நாலு திசைக் கடல்களும். கோக்க—தங்கள் அலைக் கைகள் கோத்துக் கொள்ளுமாறு கலந்து பெரு வெள்ளமாக. ஆடினான் புகழ்—நடம் புரிந்தவரான சிவ பெருமானுடைய புகழை. அங்கை நரம்பினால்—அழகிய தன் கையின் நரம்புகளை வீணைத் தந்திகளாய்க் கொண்டு. நாற்பெரும் பண்ணும்—பாலை, குறிஞ்சி, மருதம், செவ்வழி என்னும் நால்வகைப்பட்ட ஸம்பூர்ண ராகங்களும். நயப்புற—இனிமையடையும்படி. பாடினான்—பாடியவனான ராவணனுடைய. பெயர் பாடுகின்றார்—நாம ஸங்கீர்த்தனம் செய்து பொழுது போக்குகின்றார்.]

சிவபெருமானின் ஒரு பெரு நடன விசேஷத்திலே, — அதாவது ஊழிக் கூத்திலே — அவர் ஆட ஆட நாலு திசைக் கடல்களும் ஆடிப் பொங்கியெழுந்து அலைக் கைகளைக் கொட்டிக் கோத்து நெருங்கிக் கலந்து விடுமாம் ஒரே மகாப்பிரளய வெள்ளமாக.

இந்தப் பரமேச்வரனின் புகழ் பாடிய ராவணேச்வரனின் நாம ஸங்கீர்த்தனம் தான், யட்சகுல மனைவியரின் வெங்காம வெம்பிணிக்கு மாமருந்தாகி, நம் கவிஞனுக்கு எத்தகைய வசிகர இசைச் சித்திரமாகி விட்டது!

* * *

இத்தகைய யட்சகுல தேவியரின் வீதி கடந்து அனுமன் ராவணனுடைய ராட்சஸ மனைவியர் வசிக்கும் இடங்களிலும் தேடப் போகிறான்.